பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 15 வியாழக்கிழமை (29-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:64



வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்படையினரின் 'டோரா' படகு மீன்பிடிப்படகின் மீது மோதியதில் படுகாயமடைந்த கடற்றொழிலாளர்களான பி.ஞானமணி மேற்படத்திலும், ரீ.லோரன்ஸ் கீழ்ப்படத்திலும் உள்ளனர்.

### வடக்கு - கிழக்கு - மலையக மக்கள் கூட்டு:

# எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இணைவது என்பது கேள்விக்குறி

## சந்திரசேகரனின் அழைப்புக்கு தொண்டமான் நேற்றுப் பதில்

கொழும்பு,ஜனவரி29

**வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடன் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இணைந்து செயற்படுவது என்பது கேள்விக்குறியாக உள்ளது.**

**-அமைச்சர் பெ.சந்திரசேகரனின் அழைப்புக்கடிதத்திற்கு நேற்று தான் அனுப்பிய பதில் கடிதத்தில் இவ்வாறு இ.தொ.க. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்கு - கிழக்கு - மலையகத் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரளக் கோரி சமூக அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன் இ.தொ.கா. உட்பட தமிழ்க்கட்சிகளுக்கு கடிதமூலம் அழைப்பு விடுத்திருந்தார். இந்த முயற்சி குறித்து அவர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப்பேசியிருந்தார்.

அமைச்சர் சந்திரசேகரனின் அந்த அழைப்புக் கடிதத்துக்கு இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று பதில் கடிதம் ஒன்றை அனுப்பினார்.

அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது, இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற அமைப்பின் கீழ் மலையகக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புகள் ஒன்றிணைந்த போது, தங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அதனைத் தாங்கள் நிராகரித்தீர்கள்.

வடக்கு - கிழக்கு மக்களுடன் கரம் கோர்க்கும் புதிய வரலாறு குறித்து தாங்கள் கூறியிருக்கிறீர்கள். இதற்கு முன்னர் தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டு அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோர் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டபோதே வரலாறு படைக்கப்பட்டுவிட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பானிய உயர் மட்டக் குழு நாளை இலங்கைக்கு விஜயம்

கொழும்பு,ஜன.29

பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பான ஜப்பானின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று நாளை இலங்கைக்கு வருகிறது. மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு வரும் இக்குழுவினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளுக்குச் சென்று அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடவுள்ளனர்.

இந்தக் குழுவில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு மற்றும் சர்வதேச கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றின் அதிகாரிகள் அங்கம் வகிப்பர்.

நாளைமறுதினம் இவர்கள் கொழும்பில் அரச அதிகாரிகளுடன் இலங்கையுடனான தொழில் நுட்பக் கூட்டுறவு ஆகியவை தொடர்பாகப் பேச்சு நடத்து

(16ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சிக் கடற்பரப்பில்

# மீனவர் படகுடன் 'டோரா' மோதல்; கடற்றொழிலாளர் இருவர் படுகாயம்!

வடமராட்சி,ஜன.29

வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடிப்படகொன்றுடன் கடற்படையினரின் "டோரா" படகு மோதியது. இதில் மீன்பிடிப்படகு கடும் சேதமடைந்தது. அந்தப் படகில் இருந்த கடற்றொழிலாளர்கள் இருவர் படுகாயமடைந்தனர். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ரீ.லோறன்ஸ் (வயது 42), பி.ஞானமணி (வயது32) ஆகிய கடற்றொழிலாளர்கள் இருவரும் கால்களில் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு மீன் பிடிப்பதற்காக படகில் இவர்கள் இருவரும் கடலுக்குச் சென்றனர். படகில் அடையாள விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த கடற்படையினரின் 'டோரா' படகு இவர்கள் சென்றபடகுமீது மோதியது. இதில் மீன்பிடிப்படகு பலத்த சேதமடைந்தது. கடற்றொழிலாளர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் கட

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டம் இன்று

### ஜனாதிபதி கலந்துகொள்ளமாட்டாராம்

கொழும்பு,ஜன.29

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு மாநகரசபைத்திடலில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க கலந்துகொள்ளமாட்டார் எனத் தெரியவருகிறது.

அவர் செய்தியொன்றை விடுக்கலாம் எனக்கூறப்படுகிறது.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும் இக்கூட்டத்தில் (16ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அனுரவுடன் விசேட சந்திப்பு

கொழும்பு,ஜன.29

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரபண்டாரநாயக்காவைச் சந்தித்துப்பேச்சு நடத்தினார். இந்த விசேட சந்திப்பு அனுரபண்டாரநாயக்காவின் இல்லத்தில் நடைபெற்றது.

சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பியிற்குமிடையே கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதையடுத்து, எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான பல விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

லண்டனில் வசித்துவரும் சோமவன்ஸ அமரசிங்க கடந்த (16ஆம் பக்கம் பார்க்க)

# விஞ்ஞான பீடத்துக்கு மேலும் 40 மாணவர்

யாழ்ப்பாணம்,ஜன.29

2002 -2003 கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு மேலும் 40 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு நான்காவது வெற்றிடம் நிலவும் பட்டியலின் மூலம் இந்த 40 மாணவர்களும் தெரிவாகியுள்ளனர்.

பௌதிக விஞ்ஞானத்திற்கு 27 மாணவர்களும் உயிரியல் விஞ்ஞானத்திற்கு 13 மாணவர்களும் மேலதிக அனுமதிபெற்றுள்ளனர். இவர்களை உடனடியாகப்பதிவை மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார். (ஒ-6)

### ஆறு கோரிக்கைகளை முன்வைத்து:

# மக்களிடம் கையெழுத்து வேட்டை சுதந்திர தினத்தன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.29

சமாதான முயற்சிகள் தொடர்பான 6 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்களிடம் கையெழுத்துக்களைத் திரட்டும் நடவடிக்கை நாட்டின் சுதந்திரதினமான அடுத்தமாதம் 4ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நேற்றுப் பிற்பகல் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

- ★ தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளே.
- ★ விடுதலைப்புலிகள் இயக்கம் மீதானதடை நீக்கப்படவேண்டும்.
- ★ தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.
- ★ தமிழர் தாயகப் பகுதியிலிருந்து இராணுவம் முற்றாக (16ஆம் பக்கம் பார்க்க

# இளைஞரைத் தாக்கச் சென்றோர் அவரது தந்தையைக் கொன்றனர்!

### ஊரெழுப்பகுதியில் அதிர்ச்சிச் சம்பவம்!

யாழ்ப்பாணம்,ஜன.29

இளைஞர் ஒருவரைத்தாக்க அவரது வீட்டுக்குச்சென்ற கும்பல் ஒன்று அந்த இளைஞனின் தந்தையைக்கொலை செய்துள்ளது.

ஊரெழு வடக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இந்த அதிர்ச்சிச் சம்பவம் இடம்பெற்றது.

ஊரெழு வடக்கு கற்பகம் 'மில்' பகுதியைச் சேர்ந்த வைத்தி தில்லையம்பலம் (வயது 61) என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார்.

இறந்தவரின் மகனுக்கும் வேறு சிலருக்கும் இடையே முன்னர் மோதல் இடம்பெற்றதாகவும் - இதனால் ஏற்பட்ட விரோதம் காரணமாக இந்தக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என்றும் - சந்தேகிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கூறப்படுவதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு 12.30 மணியளவில் குறிப்பிட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# போராட்டத்தில் ஊழியர்கள் உறுதி! ரயில்,சுகாதார சேவைகள் பாதிப்பு

கொழும்பு,ஜன.29

ரயில்வே ஊழியர்களின் பொது வேலை நிறுத்தமும், சுகாதார சேவை ஊழியர்களின் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டமும் தீர்வு எதுவுமின்றித் தொடருகின்றனர். ரயில்வே ஊழியர்கள் கடந்த 26ஆம் திகதி நள்ளிரவு முதல் ஆரம்பித்த வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது. அவ்வாறே சுகாதாரச் சேவை ஊழியர்களின் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

இவ்விரு போராட்டங்களையும் முடிவுக்குக் கொண்டுவர இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. நேற்றுமுன்தினம் போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன, உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே ஆகியோருக்கும் ரயில்வே தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிவுற்றன. ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாகப் பிரகடனப்படுத்திய வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்யுமாறு தொழிற்சங்கங்கள் விடுத்த கோரிக்கையை போக்குவரத்து அமைச்சு நிராகரித்துவிட்டது. அவசியமானால் வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் மட்டுமே செய்யமுடியுமென அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

ரயில்வே அதிகார சபையை ஒழிப்பது தவிர்ந்த வேறு எந்த ஒரு தீர்வையும் ஏற்பதற்கில்லை என்று தொழிற்சங்கங்களும் பிடிவாதமாகக் கூறிவிட்டன. இரு தரப்பினரும் தங்கள் நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காத நிலையில் வேலைநிறுத்தம் தொடருகின்றது.

இவ்வேலை நிறுத்தம் காரணமாக பதுளை, மட்டக்களப்பு, வவுனியா, காலி ஆகிய இடங்களுக்கான இரவு தபால் ரயில் சேவைகள் திங்கள் நள்ளிரவு முதல் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன. இதனால் தபால் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சுகாதாரச் சேவை ஊழியர்களின் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் உண்ணாவிரதிகளில் மூன்று பேரின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது என நேற்று தெரிவிக்கப்பட்டது. உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பெரும் எண்ணிக்கையிலான சுகாதார ஊழியர்கள் போராட்ட இடத்தில் திரண்டு நிற்கின்றனர்.

சுகாதார அமைச்சுக்கு எதிரே 12 ஊழியர்கள் சாகும்வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

சுகாதாரச் சேவை ஊழியர்களின் 52 சங்கங்கள் இணைந்து தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு கோரி பிரதமருக்கு எழுதிய இரண்டு கடிதங்களுக்கும் இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, சுகாதார அமைச்சரோ அல்லது அமைச்சரவை உபகுழுவோ போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக பேச்சு நடத்துவதற்கென அழைப்பு விடுக்கவில்லை.

இதனால் ஊழியர்கள் பெரிதும் கொதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

அரசு தொடர்ந்தும் இப்படி அசட்டையாக இருந்தால் நாடெங்கிலும் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் சுகாதார சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடையலாம் எனவும் இதனைத் தவிர்க்க முடியாது எனவும் சுகாதார சேவை ஊழியர்கள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## சதுரங்கப் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையெ எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சதுரங்கப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதென தென்மராட்சிக்கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். குமாரசாமி அறிவித்துள்ளார்.

பிற்போடப்பட்ட போட்டிகளில் ஆண்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும், பெண்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென அவர் அறிவித்துள்ளார். (ஒ-8)

## அறிவுறுத்தற் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் சேவை முன் பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்காக சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த அறிவுறுத்தற்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-8)

## மெய்வன்மைப் போட்டிகள்

வடமாராட்சி.ஜன.29

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு பழைய மாணவரும், பிரபல தொழில் அதிபருமான வ.சிவசூரியகுமாரன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் கி.தாயகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-173)

★ ★ ★

இளவாலை,ஜன.29

மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சூ.நோ. உதயகுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர், தனபாலசிங்கம் கலந்துகொள்வார். (ஒ-48)

## மாணவனை மோதிவிட்டு ஓடித்தப்பிய வாகனம்

தென்மராட்சி,ஜன.29

பாடசாலை மாணவனை மோதிய வாகனம் ஓடித்தப்பிய சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

சைக்கிளில் சென்ற இந்த மாணவனை வாகனம் மோதிவிட்டு சென்றதாகவும், வீதியில் மயங்கிய நிலையில் காணப்பட்ட மாணவனை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அப்பகுதி மக்கள் அனுமதித்தனர். (எ-117)

# பிரதமர் அடுத்த வாரம் தாய்லாந்து விஜயம்

கொழும்பு,ஜன.29

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் தாய்லாந்துக்கு விஜயம் செய்வார். இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையேயான வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சிக்காகவே பிரதமர் அங்கு விஜயம் செய்கிறார்.

பிரதமரின் இவ்விஜயத்தின் போது வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க, உள்நாட்டு வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோர் உடன் செல்வர்.

தாய்லாந்து விஜயத்தின் போது பிரதமர் ரணில் அங்கு விசேட உரையொன்றை நிகழ்த்தவிருக்கிறார். தாய்லாந்து முதலீட்டாளர்கள் மத்தியிலும் பிரதமர் உரை நிகழ்த்துவார்.

# உள்ளூராட்சித் தேர்தல் தீர்மானத்தில் இதுவரை எவ்வித மாற்றமும் இல்லை

## ஆணையாளர் திசாநாயக்க கூறுகிறார்

கொழும்பு,ஜன.29

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச முஸ்லிம் பகுதிகளில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை எதிர்வரும் பெப்ரவரி 21ஆம் திகதி நடத்துவதென்ற தீர்மானத்தில் இதுவரை எதுவித மாற்றமுமில்லை என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க நேற்றுக்கூறினார்.

அடுத்த உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுமென அமைச்சர் கரு ஜயசூரிய கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்ததால், அத்தேர்தல்கள் திட்டமிடப்பட்டவாறு நடைபெறுமா என்று வினவியபோதே ஆணையாளர் மேற்கண்டவாறு கூறினார்.

'நுஆ' எம்.பிக்கள், அம்பாறை மாவட்ட ஐ.தே.க. எம்பி. மயோன் முஸ்தபா, அதாவுல்லா அணியினர் ஆகியோர் இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை பின்போடும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிதாக வேட்புமனுக்கள் கோரப்பட்டு கிழக்கு மாகாணத்தில் ஒரே நாளில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்தும்படியும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பல்கலைக்கழக நூலகம் இன்றுமுதல் மேலதிகமாக ஒருமணிநேரம் இயங்கும்

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்.ஜன.29

யாழ். பல்கலைக்கழக நூலகம் இன்று முதல் மேலதிகமாக மாலை 6.00 மணிமுதல் 7.00மணி வரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக நூலகத்தை இரவு 8.00 மணிவரை திறப்பது என்ற முடிவை நடைமுறைப்படுத்தக் கோரி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் துணைவேந்தரின் காரை தரிப்பிட அறைக்குள் வைத்துப் பூட்டியிருந்தனர்.

- இதனை அடுத்து இது விடயமாக ஆராய்வதற்கென பதில் துணைவேந்தர் வைத்திய கலாநிதி எஸ். சிவபாலன் தலைமையில் நேற்று பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் மாணவர்களின் நன்மை கருதி நாளாந்த கடமை நேரத்துக்கு மேலதிகமாக இன்று முதல் அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை மாலை 6மணிமுதல் இரவு 7 மணி வரை நூலகத்தைத் திறப்பது என்றும்-

நூலகத்தை இரவு 8மணி வரை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்ற மாணவர்களின் கோரிக்கைக்கு இடமளிக்கும் வகையில் அடுத்தமாதம் 5ஆம் திகதிமுதல் நூலகம் இரவு 8 மணிவரை திறக்கப்படலாம் என்றும் -

பல்கலைக்கழக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (எ-6)

# கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் ராஜினாமா

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் மா.செ.மூக்கையா நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். பதில் உபவேந்தராகக் கடமையாற்றிய என். ரவீந்திரநாத் அவரது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பல்கலைக்கழக தலைமைத்துவத்திடம் மாணவர்கள் விடுத்த கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் தொடர்பாக இடம்பெற்ற சீர்கேடுகள், மாணவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கத் தவறியமை போன்ற பல விடயங்களை முன்வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து "உங்களுடைய கோரிக்கைகளுக்கு நான் பொறுப்பு அல்லன். இதற்குமேல் என்னால் ஒன்றும் சொல்ல முடியாது" என்று கூறிவிட்டு தனது பதவியை உபவேந்தர் மூக்கையா இராஜினாமா செய்தார் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

# நீராவியடிக் கொலை வழக்கில் சந்தேகநபருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ் நீராவியடிப் பகுதியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகி, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முதலாவது சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு யாழ். மேல் நீதி மன்றம் யாழ்நீதிமன்றத்திற்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நீராவியடிப்பகுதியில் வைத்து நாரந்தனையைச் சேர்ந்த யோகேஸ்வரன்- அஜந்திப் என்ற இளைஞர் கொலைசெய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சௌந்தரராசா சுதாகரனை பிணையில்செல்ல அனுமதிக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி சந்தேக நபருக்கு பிணையில் செல்ல அனுமதி வழங்குமாறு கோரி யாழ். மேல்நீதிமன்றில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக விசாரணை நேற்று யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி கே.பீ.எஸ்.வரதராசா முன்னிலையில் இடம்பெற்றது.

இவருடைய வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிபதி சந்தேகநபரை 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும்-

யாழ். மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமாகவும், யாழ். மாவட்டத்தை தேர்தல் மாவட்டமாகவும் கொண்ட இரு நபர்களுடைய தலா ஒரு லட்சம் ரூபா ஆள்பிணையிலும் செல்வதற்கு அனுமதிக்குமாறு யாழ். நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டார்.

இந்த கொலை வழக்குத் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட மற்றைய இரண்டு சந்தேக நபர்கள் யாழ். நீதிமன்றத்தினால் கடந்த மாதம் 18 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# விடுதலைப் புலிகள் - இராணுவம் கட்டைபறிச்சானில் பேச்சு

தமிழீழ விடுதலைப் புலிகளும், இராணுவ அதிகாரிகளும் கடந்த செவ்வாயன்று மாலை மூதூர் கிழக்கிலுள்ள கட்டைபறிச்சான் பகுதி சூனியப் பிரதேசத்தில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இராணுவத்தின் சார்பில் மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், பிரிகேடியர் ஸாஹிர் ஆகியோர் கலந்துகொண்டனர். நான்கு மணிக்கு ஆரம்பமான இந்தப் பேச்சு சுமார் 45 நிமிடங்கள் நீடித்தன என்று கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது ஒரு வழமையான சந்திப்பு என கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தபோதும், என்ன பேசப்பட்டது என்பது தொடர்பான விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

# வலைத்திருட்டைக் கண்டித்து மீனவர்கள் பகிஷ்கரிப்பு

கல்முனை,ஜன.29

கல்முனை, சாய்ந்தமருது பகுதியில் இயந்திரப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கல்முனைக் குடியைச் சேர்ந்த இயந்திரப் படகு உரிமையாளர் ஒருவரின் பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான வலை கடலில் திருட்டு போனதைக் கண்டித்தே இந்த ஒரு நாள் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. ஒரு நாள் முழுவதும் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாது, திருட்டுப்போன வலையை கடலில் தேடியதோடு ஏனைய இயந்திரப் படகுகளும் சோதனையிடப்பட்டன.

# கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு எதிராக யாழ். அதிகாரி முறைப்பாடு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

யாழ்ப்பாணம்,ஜன.29

கல்விச் சேவை ஆணைக் குழுவுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு ஒன்று பதியப்பட்டது. யாழ். கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.ஸ்ரீதயாளன் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

கல்விச் சேவை கள் ஆணைக்குழு 1999ஆம் ஆண்டு நடத்திய இலங்கைக் கல்விச் சேவைக்கான பரீட்சையில் தான் தோற்றினார் என்றும்-

கல்வித் தகைமைகள் உட்பட தேவையான தகுதிகளைப் பெற்றிருந்தும் தனக்கு இலங்கைக் கல்விச் சேவைத் தரம் வழங்கப்படவில்லை என்றும்-

நியாயமற்ற முறையில் தனக்கு இதில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்றும்-

அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஒ-7)

# புதிய கூட்டமைப்பில் இணைவது குறித்து 'நுஆ',ஜே.வி.பி. தலைவர்கள் பேச்சு

தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) - ஜே.வி.பி. ஆகிய இரு கட்சிகளுக்குமிடையே நேற்று பேச்சுக்கள் இடம்பெற்றன. இப்பேச்சுக்கள் சுமுகமானதாக அமைந்திருந்தன என்று 'நுஆ' செயலாளர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவித்தார்.

சு.க. - ஜே.வி.பி. இணைந்து உருவாக்கியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைவது குறித்தே ஜே.வி.பியுடன் 'நுஆ' தலைவர்கள் பேச்சு நடத்தியுள்ளனர். 2 மணிநேரம் நீடித்த இப்பேச்சில் 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப் எம்.பி., செயலாளர் ஹிஸ்புல்லாஹ் எம்.பி., சேகு இஸ்ஸதீன் எம்.பி., முன்னாள் எம்.பிக்களான மருதூர்கனி, அஸித பெரேரா ஆகியோரும் ஜே.வி.பி. சார்பில் அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, ரில்வின் சில்வா, நந்தன குணதிலக ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குகொள்வது ஆகியவை குறித்து பேசப்பட்டன என்று ஹிஸ்புல்லாஹ் மேலும் தெரி வித்தார்.

இன்று நடைபெறவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வீர்களா எனக் கேட்டபோது, அது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று ஹிஸ் புல்லாஹ் பதிலளித்தார்.

# ஈராக்கிய அமைச்சரைக் குறிவைத்து பக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்!

பக்தாத்,ஜன.29

ஈராக்கிய உள்நாட்டு அமைச்சரைக் குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலில நால்வர் கொல்லப்பட்டனர். பதினேழு பேர் காயமடைந்தனர். அமைச்சர் காயமேதுமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

தலைநகர் பக்தாத்தில் உள்ள ஷகினா என்ற பிரபல ஹோட்டலில் தங்கியிருந்த அமைச்சரைக் குறிவைத்தே மேற்படி தாக்குதல் நடந்தது.

நேற்று அதிகாலை 6.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடந்தது. தாக்குதல் நடந்தபோது அமைச்சர் அஸ்ரா அல் மஜ்லிஸ் இரண்டாவது மாடியில் தங்கியிருந்தார். இங்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களும், பத்திரிகையாளர்களும் தங்கியிருந்தனர்.

தாக்குதல் நடந்தபோது, அமைச்சர் தொழுகையில் ஈடுபட்டிருந்தார் - என்று அவரது மெய்ப்பாதுகாவலர் உதய் தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதலில் அமைச்சர் தங்கியிருந்த மாடியின் கண்ணாடி ஜன்னல்கள் சிதறி ஹோட்டலின் கீழ்த்தளம் கடுமையாகச் சேதமடைந்தது.

சம்பவ இடத்திலிருந்து அம்புலன்ஸ்கள் மிக வேகமாக விரைந்தன என்று ஈராக்கியப் பொலீஸார் கூறுகின்றனர்.

'ஹோட்டலின் நுழைவாயிலின் அருகே நின்ற காரே திடீரென வெடித்துச் சிதறியது.' - என்று அப்போது அங்கு கடமையில் நின்ற பாதுகாப்பு ஊழியர் தெரிவித்தார்.

வேகமாக வந்த அம்புலன்ஸே வெடித்துச் சிதறியது என்று சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு ஈராக்கியர் தெரிவித்தார். ஆனால் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

கொல்லப்பட்டவர்கள் மூவரும் ஈராக்கியர்களே என்றும், காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் பக்தாத் வைத்தியசாலை தெரிவித்திருக்கிறது.

தாக்குதல் நடந்த இடத்தில் இருந்த இரண்டு ஏனைய கட்டடங்களும் கடுமையாகச் சேதமடைந்தன.


இதற்கிடையே -

பக்தாத்தின் தென்பகுதியில் வாகனத்தில் சென்றுகொண்டிருந்த சி.என்.என்.தொலைக்கட்சி நிருபர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

எமது வாகனத் தொடரணி மீது திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஆனால், வேட்டுக்களைத தீர்த்தது யார்? என்பது தெரியாது - என்று இச்சம்பவத்தில் உயிர்தப்பிய மேற்படி தொலைக்காட்சியின் புகைப்படப்பிடிப்பாளர் தெரிவித்தார்.

இவர் தனியான வாகனமொன்றில் பயணித்ததால் உயிர் தப்பியிருக்கிறார்.

அதேநேரம், இப்பகுதியில் நடந்த குண்டுவெடிப்பில் நேற்றுமுன்தினம் ஆறு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். மேலும் மூவர் காயமடைந்தனர் என்று அங்குள்ள அமெரிக்கப் படைப் பேச்சாளர் தெரிவித்தார்.



## பரவுகிறது புதிய கணனி வைரஸ்

சான் ஜோஸ்,ஜன்.29

அமெரிக்காவில் புதிய கணனி வைரஸ் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 'மைடும்' அல்லது 'நோவார்க்' என்று பெயரிடப்பட்டுள்ளது. 30 விநாடிகளில் 100 ஈமெயில் விலாசங்களைத் தாக்கும் அளவுக்கு அந்த வைரஸ் சக்தி படைத்தது. அதன் தாக்குதல் திங்கட்கிழமை முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த வைரஸ் எவ்வாறு தாக்குகிறது, அதை எப்படி தடுப்பது என்பதைக் கணனி நிபுணர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

## அ.தி.மு.க-பா.ஜ.க. கூட்டணி உறுதி

இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழகத்தில் பாரதீய ஜனதா கட்சி-அ.தி.மு.க. ஆகியவை கூட்டணி அமைத்துப் போட்டியிடும்.

பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் வெங்கையா நாயுடுவுக்கும் அ.தி.மு.க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்குமிடையில் தமிழகத்தில் நேற்றுப் பகல் இடம்பெற்ற ஒரு மணி நேர சந்திப்பில் இக்கூட்டுக்குறித்து முடிவு செய்யப்பட்டது.

தொகுதிப்பங்கீடு குறித்து இரு கட்சிகளின் குழுக்களும் கூடி ஆராய்ந்து முடிவுசெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டது.


# இஸ்ரேலியர் தாக்குதலில் 8 பலஸ்தீனர் உயிரிழப்பு!

ஜெருசலேம்,ஜன.29

காஸா பகுதியில் இஸ்ரேலியப் படையினர் நேற்று மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது குறைந்தது 8 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மீண்டும் இந்த வாரத்தில் அதிகரித்துளளது.

காஸாவில் உள்ள அல்-சுய்டவுன் என்ற இடத்திற்குள இஸ்ரேலியப் படையினர் டாங்கிகள், ஜீப்கள் சகிதம் நுழைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நெற்சரீம் குடியிருப்புப் பகுதியில் பலஸ்தீனர்கள் மேற்கொண்ட தாக்குதல்களின் பின்னர் எச்சரிக்கைக்காகவே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.



படையினர் அந்த இடத்துக்குள் நுழைந்ததும் அவர்களுக்கும் இஸ்லாமிய ஆயுததாரிகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது. இதில் தமது உறுப்பினர்கள் ஐவராவது உயிரிழந்தனர் என்று இஸ்லாமிக் ஜிகாத் அமைப்புத் தெரிவித்தது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் பின்னர் இஸ்ரேலியப் படையினர் அங்கிருந்து விலகினர்.

இஸ்ரேலியப் படையினரின் இந்த நடவடிக்கையை பலஸ்தீன அதிகார சபை கடுமையாகக் கண்டித்துள்ளது. (ம)

# பொதுநலவாய நாடுகள் அமைப்பில் மீண்டும் பாகிஸ்தானைச் சேர்க்க பிரிட்டன் ஆதரவு

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து பாகிஸ்தானை தற்காலிகமாக நீக்கி வைத்திருப்பதை ரத்துச் செய்யவேண்டும் என்ற கோரிக்கைக்கு பிரிட்டன் ஆதரவு தெரிவித்துள்ளது.

இதை இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

1999ஆம் ஆண்டில் புரட்சி மூலம் முஷாரப் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அந்த அமைப்பில் இருந்து பாகிஸ்தான் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் பாகிஸ்தானை மீண்டும் சேர்ப்பதற்கு பிரிட்டன் முழு ஆதரவு தெரிவிக்கும் என்று அந்நாட்டு பிரதமர் ரொனி பிளயரின் வெளியுறவுத்துறை ஆலோசகர் சர்நிஜெல் ஜெயின்வால்ட உறுதியளித்துள்ளதாகவும் அவர்கள தெரிவித்தனர்.

அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே நிலவிவந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டதால பொதுநலவாய நாடுகள் அமைப்பின் விதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் ஜமாலி, வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷீத் மெகமூத் கசூரி ஆகியோரையும் சர் நிஜெல் ஜயின்வால்ட் சந்தித்துப் பேசினார்.

சார்க் மாநாட்டின்போது பிரதமர் வாஜ்பாயுடன் முஷாரப் நடத்திய பேசசுகள் குறித்து அவரிடம் விளக்கினார் ஜமாலி.

## ஆப்கானில் பிரிட்டிஷ் சிப்பாய் பலி!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிபபில் குறைந்தது ஒரு பிரிட்டிஷ் சிப்பாய் உயிரிழந்தார். மேலும் 3 பிரிட்டிஷ் படையினரும் ஒரு ஆப்கான் பிரஜையும் காயமடைந்துள்ளனர்.

அப்பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்த பிரிட்டிஷ் படையினர் மீது தற்கொலைத் தாக்குதலே நடத்தப்பட்டது என்று உறுதிப்படுத்தப்படாத செய்தி ஒன்று தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பன்னாட்டு அமைதிப் படையினர் மீது நடத்தப்பட்ட தற்கொலைத தாக்குதலில் கனேடியச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதலுக்கும் தலிபான்களுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடத்தப்பட்ட தாக்குதலின போது பிரிட்டிஷ் படையினர் பயணம் செய்த ஜீப் மிக மோசமாகச் சேதமடைந்திருந்தது என்று பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

உலக அரங்கில்

# அமெ. ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தெரிவு; ஜோன் கெரி இரண்டாவது மாநிலத்திலும் முன்னணி!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் தெரிவில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி நியூஹம்செயா மாநிலத்திலும் வெற்றியீட்டி முன்னணியில் உள்ளார்.



ஜோன்கெரி

கடந்த வாரம் ஐயோவா மாநிலத்தில் நடைபெற்ற தெரிவிலும் இவரே வெற்றியீட்டியிருந்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். இதில் குடியரசுக்கட்சி வேட்பாளரான ஜனாதிபதி புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடுவதற்காக ஜனநாயகக் கட்சி வேட்பாளராவதைத் தெரிவு செய்வதற்கான உட்கட்சித் தேர்தல் தற்போது நடைபெற்றுவருகிறது

கடந்த வாரம் ஐயோவா மாநிலத்தில் முதல்முதலாக இந்தத் தெரிவு இடம்பெற்றது. தற்போது, நியூஹம்செயா மாநிலத்துக்கான தெரிவு இடம்பெற்றிருக்கிறது.

செனட்சபை உறுப்பினரான ஜோன கெரி, ஐயோவா மாநிலத்தில் 36 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்த போதும் நியூஹம்செயா மாநிலத்தில் அவருக்கு 39 சதவீத வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

கெரிக்கு ஆதரவு பெருகிவருவதையே இது எடுத்துக்காட்டுகிறது என்று விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

நியூஹம்செயா மாநிலத்தில் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் ஆளுநர் ஹோவாட்டீன் 26 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இந்த மாநிலத்தில் போட்டியிட்ட மற்றொரு வேட்பாளரான இராணுவ அதிகாரி ஜெனரல் வெஸ்லி கிளார்க மூன்றாவது இடத்தில் உள்ளார்.

நியூஹம்செயா மாநிலத்திலும் கெரி வெற்றியீட்டியிருப்பதை அவரது ஆதரவாளர்கள் கோலாகலமாகக் கொண்டாடினர்.

மேற்படி இரண்டு மாநிலத்திலும் வெற்றிபெற்று முன்னணியில் உள்ள கெரி, ஜனாதிபதி புஷ்ஷையும் அவரது கொள்கைகளையும் கடுமையாக விமர்சித்தவர். ஈராக், ஆப்கானிஸ்தான் போர்களை கடுமையாகக் கண்டித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.சபைக் குழு ஈராக்கிற்கு வார இறுதிக்குள் விரையும்!

நியூயோர்க்.ஜன.29

ஈராக் தேர்தல் பணிகளை முன்னெடுக்கவென ஐ.நா.சபையின் குழுவினர் இந்த வார இறுதிக்குள் ஈராக்கிற்கு விரைவர் என்று ஐ.நா. சபையின பொதுச்செயலர் கோபி அனான் அறிவித்துள்ளார்.

கடந்த வருட இறுதியில் ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தில் அமைந்திருந்த ஐ.நா.கட்டடத்தை கெரில்லாக்கள் தாக்கி அழித்ததைத் தொடர்ந்து, ஈராக்கிலிருந்து ஐ.நா. பணியாளர்கள் வெளியேறினர்.

ஈராக்கில் பாதுகாப்பு நிலை சீரடையும்வரை அங்கு தமது பணியாளர்கள் செல்லமாட்டார்கள் என்று ஐ.நா. அறிவித்திருந்தது. எனினும், அமெரிக்காவினதும், ஈராக்கிய இடைக்கால நிர்வாகக் குழுவினதும் வேண்டுகோளின் பேரில் அங்கு தமது குழுவை அனுப்ப கோபி அனான் உறுதியளித்திருந்தார்.

ஈராக் செல்லும் குழுவுக்கு அமெரிக்கப் படையினர் போதிய பாதுகாப்பு வழங்குவர் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, ஐ.நா. சபை உறுப்பு நாடுகளுடன் இதுகுறித்து கோபி அனான் கடந்த ஒருவாரமாக கலந்துரையாடினார்.

நேற்று உத்தியோகபூர்வமாக எதிர்வரும் வாரத்திற்கு முதல், ஈராக்கிற்கு ஐ.நா.குழு விரையும் என்று அவர் அறிவித்திருக்கிறார். நாளை வெள்ளிக்கிழமை இக்குழுவினர் பக்தாத்திற்கு செல்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே - கடந்த ஞாயிற்றுக்கிழமை ரைக்றிஸ் நதிக்கரையில் வீழ்ந்த ஹெலியிலிருந்த மூன்று படையினரையும் கண்டுபிடிக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இரண்டு விமானிகளும் படையினர் ஒருவரும் காணாமல் போயிருப்பது அங்குள்ள அமெரிக்கப்படையினருக்கு விடுக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய சவால் என்று கூறப்படுகிறது. ஐ.நா. குழு அங்கு விரையவிருக்கும் நிலையில் இவர்கள் காணாமல் போயிருப்பது அமெரிக்காவுக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

# பறவைக் காய்ச்சல் தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

பறவைக்காய்ச்சல் நோயை உடனடியாக தடுக்காவிட்டால் உலகம் முழுவதும் லட்சக்கணக்கில் உயிரிழப்பு ஏற்படும் அபாயம் உருவாகும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆசிய நாடுகளில் வேகமாகப் பரவிவரும் பறவைக்காய்ச்சல் நோய் ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து உலக நாடுகள் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

இந்த நோய் பாதித்துள்ள நாடுகளுக்குச் செல்லவேண்டாம் என்று சுற்றுலா பயணிகளுக்கு உலக சுகாதார நிறுவனம் கட்டுப்பாடு எதுவும் விதிக்கவில்லை. ஆனாலும், கோழிப் பண்ணைகளில் வேலை செய்பவர்களுடன் நெருங்கிப்பழக வேண்டாம் என்று தடை விதித்துள்ளது.

கோழிப்பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் முக கவசம், கையுறை, கிருமிநாசினி ஆகியவற்றை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனை கூறியுள்ளது.

இந்த நிலையில் பறவைக் காய்ச்சல் பரவுவதை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் உலகம் முழுவதும் லட்சக்கணக்கில் இது உயிர இழப்பை ஏற்படுத்தி விடும் என்றும் உலக சுகாதார அமைப்பு (டபிள்யூ.எச்.ஓ.) எச்சரிக்கை விடுத்துள்ளது.

# சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டோர் பற்றி ஆராய நிபுணர் குழு வருகிறது

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். குடாநாட்டில் போர் நடைபெற்ற காலங்களில் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டவர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக 'சர்வதேச சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வுக் கவுன்ஸில்' என்ற அமைப்பின் உயர்மட்ட அதிகாரிகள் குழு நாளை யாழ்ப்பாணம் வருகிறது.

கடந்த 26 ஆம் திகதி கொழும்புக்கு வந்த இக்குழு நீதி அமைச்சர், கொழும்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள சங்க நிர்வாகிகள், மனித உரிமைகள ஆணைக்குழுத் தலைவர் ராதிகா குமாரசாமி, வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோருடன் சித்திரவதைக்குள்ளாக்கபட்டவர்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

நாளை குடாநாட்டிற்கு வரும் இக குழுவினர் காலை 10.30 மணிக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இணையப் பிரதிநிதிகளையும், பிற்பகல் 2.00மணிக்கு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தையும், பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க நிர்வாகிகளையும், மாலை 4 மணிக்கு யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட அரச அதிபரையும், மாலை 6 மணிக்கு நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளையும், உளநல மருத்துவ நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரத்தையும் சந்தித்துக் கலந்துரையாடுவர்.

அத்துடன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்களையும் நேரில் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய புனர்வாழ்வுப்பணிகள் பற்றியும் கலந்துரையாடுவர்.

குடாநாட்டில் வாழும் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டி அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக சந்திப்புகளில் கலந்துரையாடப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் இயங்கிவரும் இக்குழுவில உலக சுகாதார நிலையம், துருக்கி மனித உரிமைகள் நிறுவனம், லண்டனில் உள்ள மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

சித்திரவதைக்கு உட்பட்டவர்களின பெயர்விவரங்களைச் சர்வதேச ரீதியில் திரட்டுவதிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கம்போடியா, வியட்நாம், இஸ்ரேல், ருவாண்டா, பலஸ்தீனம் போன்ற நாடுகளிற்கு விஜயஞ்செய்துள்ள இக்குழுவினர் முதல்முறையாக இலங்கைக்கு வந்துள்ளனர். (ம-5)

# பல்கலைக்கழக விருதுகள் இரவு; 5ஆம் திகதி கோலாகலம்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் வருடாவருடம் நடத்தப்படும் 'விருதுகள் இரவு' (Colours Nite) நிகழ்ச்சி, இம்முறை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படவுளளது என யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவை அறிவித்துள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. விளையாட்டு அவைத் தலைவர் பொ.கிருபாணந்தன தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்துகொள்கிறார்.

2003ஆம் ஆண்டில் விளையாட்டுத துறையில் சிறந்து விளங்கிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. நிகழ்வின் இறுதியில் 'றிதம்ஸ்' குழுவின் இன்னிசை கானங்களும் இடம் பெறும். (ம-9)

# புலமைப்பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.29

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் உதயனில் பாடசாலை ரீதியாக வெளியாகிவருகின்றன. அதில் நேற்றைய உதயனில் வெளியாகிய பெறுபேறுகளின்படி யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை என்று பிரசுரமாக வேண்டியது தவறுதலாக இந்துமகளிர் பாடசாலையென பிரசுரமாகியுள்ளது.

**யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை**

தோற்றியோர்- 102, சித்தி - 34

வி.ஆரணிஜா (156), ரி.பிரவீணா (133), எம்.நீதினி (154), எஸ்.லக்சனா (132), கே.காவேரி (131), வி.பானுஜா (153), ஏ.வருஜா (130), ஏ.சாம்பவி (152), எஸ்.நிஷானிகா (128), எஸ்.கீர்த்தனா (157), எஸ்.சுகன்யா (126), எஸ்.ஜனனி (150), வி.சுமித்தா (126), ஜே.விவேகா (125), கே.பஞ்சுகா (146), டி.றஜிந்தா ஜெமிவலன்ஷிகா (144), கே.கீர்த்தனா (143), வை.துஷாயினி (124), வி.சஞ்சுதா (143), வி.தேனுஜா (122), எஸ்.பவதாரிணி (139), பி.மயூரி (120), என்.நிருஷா (139), எஸ்.தர்மிகா (119), ஜே.கம்சாந்தினி (137), வி.கிரோனி (119), டி.கோபிகா (136), ஜி.லக்ஷ்மி (119), எம்.பானுப்பிரியா (135), ஆர்.சாஜினி (118), எஸ்.சித்திராணி (133), எஸ்.சுபானி (118), எஸ்.சோபிதா (133), வை.மயூரா (118)

மேலும் சில பாடசாலைகளின் விவரம்:-

**காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம்**

தோற்றியோர் - 13, சித்தி - 03 பேர்

சு.ஜங்கரன் (126), ஞா.தர்சினி (124), கோ.சுகன்யா (119),

**நாவற்குழி மகா வித்தியாலயம்**

இ.பரந்தாபன் (132), ச.தர்மினி (129), சி.சங்கீதா (127), தி.சுதர்சினி (121), ச.கேமா (119),

**சித்தன்கேணி பிளவத்தை அ.மி.த.க.பாடசாலை**

சி.கோபிநாத் (147), ச.சுஜிதன் (140).

**கொக்குவில் சி.சி.த.க பாடசாலை**

தோற்றியோர் - 17, சித்தி - 03

து.பிரசாந்தன் (143), அ.சஞ்ஜீவா (127), ம.மதுரா (122),

**அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி**

சு.மெர்ஹினி (157), இ.சுதாந் (141), சரஜீனா (122) மற்றும் ஜெ.லலிதா (121).

**சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

பி.குசலன் (164), எஸ்.சனோ (157), கே.விபுலன் (148), எம்.நிவேதிகா (147), ரி.அனோஜன் (147), ரி.அருளினி (147), எஸ்.அனுஜா (144), எஸ்.சிவதர்சினி (142), கே.கியூரன் (140), ரி.யோனிதா (139), என்.தர்ஜிகா (138), கே.வானுஜா (136), ஜி.சரண்ஜா (135), என்.கிருத்திகா (133), எஸ்.ரேகிஜா (132), பி.திரேகா (132), என்.ருபினி (131), எஸ்.ரிசர்பன் (129), எஸ்.லக்ஸ்மிஜா (128), எஸ்.கோபிகா (127), எஸ்.கஸ்தூரி (126), ஜே.ஜனந்தன் (125), ஜி.அஜந்தினி (125), ஜே.சோமஜயன் (123), கே.லோஜனா (122), கே.நவிலன் (119), பி.சங்கீர்த்தனா (118).

**உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்**

கே.அகிலன் (123), வை.பிறின்தா (130). (ம-ரி-5-31)

## நூல் விமர்சனம்

எழுத்தாளர் தேவகாந்தனின் 'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்' நூல விமர்சன அரங்கு எதிர்வரும் முதலாம திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியடியிலுள்ள எழுத்தாளர் ஒன்றியத்தில் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.நூலின் விமர்சனவுரையை க.சட்டநாதன், அ.யேசுராஜா, பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ம-10)

பாரம்பரிய கலைகள் விழாவில்

# மூத்த கலைஞருக்கு சக்கர நாற்காலி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக கழகம் நடத்திய கூத்து நாடக விழாவில இணுவிலைச் சேர்ந்த மூத்த கலைஞரும் விபத்துச் காரணமாக ஒரு காலை இழந்தவருமான சிவசுப்பிரமணியத்திற்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

செ. மெற்றாஸ்மயில் தலைமையில் கந்தர்மடம் சைவவித்தியாலய நாடக அரங்கில் நடந்த இந்த நிகழ்வில் மருதங்கேணி உதவி அரச அதிபர் கோ.வேலாயுதபிள்ளை சக்கர நாற்காலியை அன்பளிப்புச் செய்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இந்த நாற்காலியை வழங்கியிருந்தது.

"பாரம்பரியக் கலைகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதுடன், கலைஞர்களைக் கௌரவிப்பதும் அவர்களைப் பாதுகாப்பதும் இந்தக் கழகத்தின் கடமையாகும். கலைஞர்கள் தமது ஆத்ம திருப்திக்காகவும் மற்றவர்களின் மகிழ்ச்சிக்காகவும் கலாசார மேம்பாட்டுக்காகவும் தம்மை அர்ப்பணித்துள்ளனர். கலைஞர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்னும் உள்ளுணர்வின் வெளிப்பாடாகவே இது கருதப்படவேண்டும்" - என்று நிகழ்வில் உரையாற்றிய உதவி அரச அதிபர் தெரிவித்தார்.

"தன்னலமற்று கலைச்சேவை புரிந்தவர்களின் நலன்கள் அவர்களது ஓய்வுகாலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைக் கலை உலகத்தினரும் நிறுவனங்களும் பொதுமக்களும் மறந்துவிடக்கூடாது" - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-88)

# பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் தையல், மனையியல், தலையலங்காரம், பூ வேலைப்பாடுகள், ஐசிங், வூல் நூல் வேலைப்பாடுகள் போன்றவற்றுக்கான பயிற்சிகள் நடைபெறவுள்ளன. இதில் பயிற்சி பெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை யாழ்.சமூக செயற்பாட்டு மையம், 159, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-ரி)

# சைவசமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.29

வண்ணை, சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையே சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு ஆண்டுதோறும் நடத்திவரும் சைவ சமய அறிவுப் பரீட்சையும் செயன்முறைப் போட்டியும் இந்த ஆண்டும் நடைபெறவுள்ளன.

சைவசமய அறிவுப் பரீட்சை தரம் ஒன்று தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கும் செயன்முறைப் போட்டிகளான கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகியன வயது வேறுபாடின்றியும் நடைபெறும்.

மேற்படி பரீட்சையிலும் போட்டியிலும் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம், 163, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சைவசமய அறிவுப் பரீட்சை அடுத்தமாதம் 29, மார்ச் மாதம் 6 ஆகிய திகதிகளிலும், செயன்முறைப் பரீட்சை மார்ச் மாதம் 7ஆம் திகதியும் நடைபெறும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் தினம் அடுத்தமாதம் 3ஆம் திகதியாகும்.

பரீட்சையிலும் போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெறுவோருக்கு வெள்ளிப் பதக்கமும் 2ஆம், 3ஆம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படும் என்று பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ம-10)


## மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டி - 2004

**லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும்**
***வை.அர்ஜன்*** **சுற்றுக்கேடயத்துக்கான**
**மாபெரும் மென் பந்து சுற்றுப்போட்டி ~ 2004.**

▲ போட்டிகள் யாவும் 7 பேர், பத்து பந்துபரிமாற்றங்களைக் கொண்டதாக அமையும்.
▲ விண்ணப்ப முடிவுதிகதி: 10.02.2004
▲ அணி ஒழுங்குத் தெரிவு: 11.02.2004

**விண்ணப்பப்படிவங்கள் பெறும் இடங்கள்:**
▲ கீத்தா றேடர் - மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.
▲ கலா ஸ்ரோர்ஸ் - திருநெல்வேலி
▲ குமார் ரெயிலறிங் ~ K.K.S வீதி, தாவடி.
▲ **SOLAX OPTICAL** 516, Hospital Road, Jaffna.

– லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்,
ஆனைக்கோட்டை.

விளம்பர அனுசரணை:
**SOLAX OPTICAL**
516, Hospital Road, Jaffna.
(சி-32986) ☎ 0777-286020. (34-13-17-21)


## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பரும் எமது நிறுவன ஊழியருமான
திரு.கந்தையா சிவராசா அவர்களின் அன்புத் தந்தையார்

**வைத்தி கந்தையா**

அவர்கள் காலமான செய்திகேட்டு, நாம் ஆழ்ந்த கவலை அடைவதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபந் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மயூரா தச்சுத் தொழிற்சாலை,
மானிப்பாய்.
(27774) (24-13-17-21)
உரிமையாளரும்,
ஊழியர்களும்

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 - 07 - 1947



மறைவு 08 - 02 - 2003

அமரர்

**ஆறுமுகம் சிவஞானசுந்தரம்**

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, கொழும்பு)

*நீங்கா நினைவோடு நீர் மல்கும் விழியோடு*
*ஏங்கித் தவிக்கின்றோம் ஏன் விட்டுப் பிரிந்தீர்!*
*தலைமகனே உம்பிரிவை தாங்காது துடிக்கின்றோம்*
*ஓராண்டு ஆகியும் விழியோரம் நனைக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா,
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

பருத்தித்துறை.
(27764)(34-21-13-17)

## மரண அறிவித்தல்

**திருமதி சிவக்கொழுந்து அம்பலவாணர்**

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், கண்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து அம்பலவாணர் நேற்று (28.01.2004) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் A.R. சிற்றம்பலம் அண்ட் கோ முன்னாள் உரிமையாளர் அமரர் அப்பாப்பிள்ளை அம்பலவாணர் அவர்களின் அருமைத் துணைவியாரும் அமரர் சிவமணி, பேராசிரியர் சிவராஜா (அரசறிவியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயலக்ஷ்மியின் மாமியாரும் திருமதி யசோதா அகிலன், இளங்கோ, இறமாறன் ஆகியோரின் பேர்த்தியாரும் அக்ஷயனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கண்டி பல்கலைக்கழகப் பூங்கா, இலக்கம். C55 ஒகஸ்ரா ஹில் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2004) வியாழக்கிழமை காலை நடைபெற்று, நண்பகல் 12மணியளவில் கண்டி மஹியாவ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பிற்பகல் 1மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா.
C55 AUGUSTA HILL,
UNIVERSITY PARK,
PERADENIYA.
(C/32990)(35-21-13-17)

# உதயன்

## உதவி வழங்குவதற்கு உண்டு மாற்று வழிகள்!

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான முயற்சிகள் தடைப்பட்டு, நெருக்கடிநிலைமை நீடிப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் கவலை வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கை விடயம் சம்பந்தமாகத் தமது கவலையை வெளியிடும் அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியிருக்கும் மற்றொரு அம்சமும் முக்கியமாகின்றது.

இலங்கையில் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புக்கு சர்வதேச நாடுகள் தொடர்ந்தும் உதவி வழங்க வேண்டும் என்று அவர் விடுத்திருக்கும் கோரிக்கைதான் அது.

இரண்டு தசாப்த காலக் கொடூரப் போர் நிறுத்தப்பட்டிருக்கின்றது. யுத்தம் ஓய்ந்து விட்டது. வெடிகலங்கள் அமைதி பேணுகின்றன. சமாதான நிலை நீடிக்கின்றது. ஆனால், சமாதானத்தின் பயனை (Peace Dividend) தென்னிலங்கைதான் அனுபவிக்கின்றது. இதுவரை போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு யுத்தத்தின் சத்தம் ஓய்ந்ததைத் தவிர வேறு எந்தப் பலனும் கிட்டவில்லை.

இதையே தமிழர் தரப்பும் கடந்த இரண்டு வருடகாலமாகச் சுட்டிக்காட்டி வருகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் மீள் குடியமர்வு, புனர்வாழ்வுச் செயற்பாடுகள் தொடர்பாகவோ, தமிழ்ப் பிரதேசங்களின் உள்கட்டுமானம், அத்தியாவசிய சேவைகள் போன்றவற்றை சீரமைப்பது சம்பந்தமாகவோ காத்திரமான நடவடிக்கை ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை. போரினால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் அல்லற்படும் ஏதிலிகளின் அவசர - அடிப்படை - மனிதாபிமானத் தேவைகள் கூட நிறைவு செய்யப்படவில்லை.

இந்தப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான ஆக்கபூர்வமான முயற்சிகளோ, நடவடிக்கைகளோ கூட எடுக்கப்படாமல் அரசுத் தரப்பு காலத்தை இழுத்தடித்து வருகின்றது. இவற்றை மேற்கொள்வதற்காகத் தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட பல ஆலோசனைகள், திட்டங்கள் எல்லாமே குழப்பியடிக்கப்பட்டன.

இப்போது தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவ நெருக்கடியைக் காரணம் காட்டி, தமிழர் பகுதிக்கான அவசர புனர்வாழ்வு, மீள்குடியேற்றப் பணிகள் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில்தான் தென்னிலங்கைப் போக்கைப் புறம் ஒதுக்கி விட்டு, இதுவரை நடந்த போரினால் பாதிப்புற்ற தமிழர்களுக்கு உதவி செய்ய வேறு மார்க்கத்தைத் தேடும்படி தமிழர் தரப்பு வலியுறுத்துகின்றது.

இந்தப் பின்னணியில்தான் -

போரினால் அழிந்த தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிதி உதவிகளை அரசு சார்ந்த அமைப்புகளை விடுத்து, அரச சார்பற்ற அமைப்புகள் மூலமாக நேரடியாக வழங்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் எனப் புலிகள் கோரியிருக்கின்றார்கள்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்கு நாடுகளுக்கான தமது சுற்றுப் பயணத்தை ஆரம்பிக்க முன்னரும் இதே விடயத்தை வலியுறுத்தியிருந்தார்.

தமது மேற்கு நாட்டு விஜயங்களின் போதும் வெளிநாடுகளிடம் இதே விடயத்தை அவர் வலியுறுத்தி அந்நாடுகளின் இணக்கத்தைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மக்களுக்கென வெளிநாடுகள் வழங்கும் நிதி வீரயமோ, முறைகேடுகளோ இன்றி மக்களின் மனிதாபிமானத் தேவைகளுக்கு முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு அரசு சாராத அமைப்புகளின் உதவியை வெளிநாடுகள் கோரலாம் என்று தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தமிழர் தரப்பின் கோரிக்கையை வலுப்படுத்தும் விதத்தில் ஐ.நா. செயலாளரின் பிந்திய கோரிக்கை வந்திருக்கின்றது. 'யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புக்கு' என்று தெளிவாகக் குறிப்பிட்டு, அப்பகுதிகளுக்கு சர்வதேச நாடுகள் உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என்று அவர் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார்.

அவ்வாறு உதவிகளை வழங்குவதற்கு - அந்த உதவிகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்கும் மக்களுக்கும் சென்றடைவதற்கு - கொழும்பு அரசியல் நெருக்கடி என்ற நந்தி குறுக்கே நிற்குமானால், அதை ஒதுக்கிவிட்டு வேறு மார்க்கத்தில் உதவிகளை வழங்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

போரினால் பாதிப்புற்று நலிவுற்றிருக்கும் ஒரு சமூகம் குறித்து சர்வதேச சமூகம் கவனிக்காமல் - அவதானிக்காமல் - மௌனம் சாதிக்கக் கூடாது; சாதிக்க முடியாது.

---

கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் குற்றச்சாட்டு

# விவசாய அபிவிருத்திக்குக் குடாநாட்டில் போதியளவு நிதி ஒதுக்கீடுகள் இல்லை

## கேட்டது ரூ.11 கோடி; கிடைத்தது ஒரு கோடி

வலிகாமம்தெற்கு,ஜன.29

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு செயற்படுத்தப்பட உள்ள துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாய அபிவிருத்திக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 11 கோடி ரூபாவுக்கான விவசாய அபிவிருத்தித் திட்டங்களை நாம் சமர்ப்பித்திருந்த போதிலும் ஒரு கோடி ரூபா நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன காரியாலயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ. வ.ம.க.முதலியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உதவி ஆணையாளர் மேலும் கூறியதாவது:-

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளத் தலைவர் முதலியார், விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து ஓய்வூதியம் பெற்ற முதலாவது நபர். 55 வயதில், இத்திட்டத்தில் சேரும் விவசாயிகள் ஓய்வூதியமாக 300 ரூபாவில் இருந்து ஆயிரம் ரூபாவைப் பெற வழிசெய்தவர் -

விவசாய சம்மேளனங்கள் எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்படுகின்றனவோ அவற்றை நிறைவு செய்யக் கூடிய வகையில் அவற்றின் செயற்பாடுகள் அமைய வேண்டும். கிராம மட்டத்திலான விவசாய தேவைகளை இனங்கண்டு, அவற்றைச் செயற்படுத்தவே விவசாய சம்மேளனங்கள் உருவாக்கப்படுகின்றன. கிராமமட்டதில் விவசாயத் திட்டங்களை உருவாக்கி அவற்றை திணைக்களம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற நிலைகளில் செயற்படுத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் 243 விவசாய சம்மேளனங்கள் உருவாக்கப்பட்டாலும் அவை எல்லாமே சீராக இயங்கவில்லை. 182 பதிவு செய்யப்பட்ட விவசாய சம்மேளனங்களுள் 82 மட்டுமே நல்லமுறையில் செயற்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் 986 விவசாயக் குளங்களும் 25 ஆயிரத்து 934 விவசாயக் கிணறுகளும் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற போர் அனர்த்தங்கள், இடம் பெயர்வுகள், மீள்குடியமர்வுகளின் போதெல்லாம் மக்களுக்கு உணவளித்துக் காப்பாற்றியவர்கள் விவசாயிகளே.

பசளைகள், கிருமிநாசினிகள் வரவில்லை என்பதற்காக விவசாயத்தை கைவிட்டவர்களல்லர். அவர்கள், அத்தகைய விவசாயிகளின் வருமானம், வாழ்க்கைத் தரம் என்பன உயர வேண்டும்.

விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர புதிய நீர்ப்பாசன முறைகள், புதிய வகைப் பயிர் இனங்கள், நவீன பயிர்ச்செய்கை முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகள், விவசாய உத்தியோகத்தர்களுக்குரிய பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் நெற்செய்கையைவிட ஏனைய மரக்கறிச் செய்கைக்காக 7,516 ஹெக்டேயர் நிலம் பயன்படுத்தப்படுகின்றது. இதில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளின் அடிப்படை வசதிகளை அதிகரிக்க விவசாய சம்மேளனங்கள் முன்வரவேண்டும் - எனக் கூறினார்.

பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (கிளிநொச்சி பிராந்தியம்) ஏ.சி.விநோதராசா உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

கூட்டுறவுக்கு வரைவிலக்கணம் வகுத்து செயற்பட்ட யாழ்ப்பாண மக்கள், விவசாயத்திலும் ஏனைய மாவட்டங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். அதற்கேற்ப விவசாய சம்மேளனங்கள் ஒற்றுமைப்பட்டுத் திட்டமிட்ட முயற்சிகளை மேற கொள்ள வேண்டும். என்ன என்ன பயிர்கள் எவ்வளவு நிலப் பரப்பில் பயிரிடவேண்டும் எனத் திட்டமிடல்வேண்டும். கமநல சேவைத் திணைக்களம் 8 குளங்களையும், நீர்ப்பாசனத் திணைக்களம் 12 குளங்களையும் புனரமைக்க திட்டமிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் குளம், நிலத்தடி நீர், ஆழ் கடல் நீர் என்பவற்றைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது. நிலத்தடிநீர், ஆழ்கடல் நீர் என்பவற்றை திட்டமிட்ட முறையில் பயன்படுத்தவேண்டும். யாழ்.மாவட்டத்திலுள்ள வழுக்கி ஆறு, உப்பாறு, தொண்டமனாறு போன்றவற்றில் பாரிய புனரமைப்பு வேலைகள் திட்டமிட்ட முறையில் மேற்கொண்டால்தான் வெற்றியளிக்கும் - என்றார்.

சி.பொ.வ.ம.க.முதலியார் தமது தலைமையுரையில்: கடந்த வருடத்தில் எமது சம்மேளனம் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்துள்ளது. நியாப் திட்டத்தின்கீழ் இவ்வருடம் 3 குளங்கள் புனரமைப்புச் செய்யவுள்ளோம். கேலன்காமம்குள அபிவிருத்திக்கென இம்முறை ரூபா 4 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நொறாட், நியாப் அமைப்புகளின் உதவியுடன் நீர்ப்பாசனத் திணைக்கள உதவிபெற்று அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வோம். விவசாயிகளின் நன்மைகருதி அரிவிவெட்டும் இயந்திரம் ஒன்றை எமது சம்மேளனம் கொள்வனவு செய்ய உள்ளது - என்றர்.

கீரிமலை விவசாய போதானாசிரியர் திருமதி ப.மணிவண்ணன், யாழ். மாவட்ட பொருண்மிய இணைப்பாளர் சத்தியநாதன், உடுவில் கமநல சேவைநிலைய சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதன் உட்படப் பலர் உரையாற்றினர். சிறந்த விவசாயிகளுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. (ம-152)

---

# ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் குடாநாட்டில் பணிகளை மட்டுப்படுத்தும்

யாழ்ப்பாணம்,ஜன.29

குடாநாட்டில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் புனரமைப்புப் பணிகள் இந்த வருடம் மட்டுப்படுத்தப்படவிருக்கின்றன என அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த நிறுவனத்தின் பணிகள் குறைக்கப்படுவது தொடர்பாகக் கேட்டபோது அவர் கூறியதாவது:-

இந்த நிறுவனம் 1997ஆம் ஆண்டு தனது புனரமைப்புப் பணிகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தது.

கடந்த டிசெம்பர் வரையான காலப்பகுதியில் 74 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டன. 300 பாடசாலைகளில் மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

யாழ். மாநகரசபைப் பகுதியில் குடிதண்ணீர் விநியோகம் சீரமைக்கப்பட்டது. 17 கிராமிய குடிதண்ணீர்த் திட்டங்கள் புனரமைக்கப்பட்டன.

2 ஆயிரம் வீடுகள் அமைக்க உதவிகள் வழங்கப்பட்டன. கப்பூது கிராமத்துக்கு புதிய குடிதண்ணீர்த் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. நாவற்குழியில் உணவுக்களஞ்சியம் புனரமைக்கப்பட்டது. மூளாய் வைத்தியசாலையில் பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் திட்டங்களைச் செயற்படுத்த 46 கோடியே 50 லட்சம ரூபா செலவிடப்பட்டது.

இத்திட்டங்களில் வீடமைப்புத் திட்டம் மட்டும் பூரணமாக்கப்படவில்லை.

இவ்வாண்டு புனரமைப்புப் பணிகளை மட்டுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கோப்பாய், சாவகச்சேரி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மட்டும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசங்களில் மட்டும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம் - என்றார் அவர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் இந்த ஆண்டுக்கான தனது குடாநாட்டு நிதி ஒதுக்கீட்டைப் பெருமளவு குறைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-3)

---

# யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றியோர் பணி விலக வேண்டிய நிலை

## மீள் நியமனம் வழங்கப்படவில்லை

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வந்த சகல துறைசார் உத்தியோகத்தர்களுக்கும இவ்வாண்டுக்கான மீள்நியமனங்கள் வழங்கப்படவில்லை. அவர்கள் தங்கள் பணியிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே ஊழியர் பற்றாக் குறையுடன் இயங்கும் வைத்தியசாலை இந்த நடவடிக்கையால மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள், துணைநிலை வைத்திய உத்தியோகத்தர்கள், தாதியர்கள் உட்பட சுமார் 30 உத்தியோகத்தர்கள் போதனா வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வந்தனர்.

இவர்களில், சத்திர சிகிச்சையின்போது மயக்கமருந்து கொடுககும் வைத்திய அதிகாரி, எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர் ஆகிய மூவரைத் தவிர ஏனைய 27 பேருக்கான மீள் நியமனக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் இவர்கள தமது பணியிலிருந்து விலகிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று, நான்கு மாதங்களாக தமக்கான மீள் நியமனத்தை எதிர்பார்த்து, நோயாளர்களின் நன்மை கருதிப் பணியாற்றி வந்த இவர்களுக்கு மீள் நியமனம் வழங்கப்படவில்லை. அந்தக் காலத்துக்கான கொடுப்பனவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சில உத்தியோகத்தர்கள் தமது பணியிலிருந்து ஏற்கனவே விலகிச் சென்றுள்ளனர். இவ்வாறு விலகிச் சென்ற உதவி வைத்திய அதிகாரி ஒருவரின் பொறுப்பிலிருந்த யாழ். போதனா வைத்திய சாலையின் நோயாளர் புள்ளி விபரவியல் பிரிவு தற்போது ஆஸ்பத்திரி பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பொறுப்பில் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-8-15)

**நாளை**

தை 16
வெள்ளிக்கிழமை
(30.01.2004)
திதி : நவமி
பின்னிரவு 5.30 வரை
நட்சத்திரம்: பரணி
பின்னிரவு 2.01 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 6.36 - 8.06
ராகுகாலம்: 11.06-12.36
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

செவிச்சுவையை உணராமல் வாய்ச்சுவையை மட்டும் அறியும் உணர்வுடையவர்கள் இறப்பதால் கேடில்லை.

---

# பிரதேச அபிவிருத்திக்கு யாழ். நகர் கிழக்கு தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.29

இந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தித் திட்டத்துக்காக யாழ். பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில யாழ். நகர் கிழக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் சகல வெளிக்கள அலுவலர்களுக்கும் விடுத்துள்ளார். இப்பகுதியில மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாக சிபார்சுகளை வழங்குமாறும் சேவைகளை வழங்குவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக தெரியப்படுத்துமாறும் - யாழ் பிரதேச செயலர் மேலும் கேட்டுள்ளார்.(ம-9)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாம் கன்று (Plam Trees) பஷன புறுட் கன்றுகள் (Passion fruit trees) விற்பனைக்குண்டு. தொடர்பு: 85, செம்மணி வீதி (கல்விக் கந்தோா அருகில்), நல்லூர். (27674)

நல்ல நிலையில் உள்ள டீ பிற சர் விற்பனைக்குண்டு. தொடர்பு: கிரவி, டோடி பந்தல் சேவை, இல.7, 6ஆம் குறுக்கு, குருநகர், யாழ்ப்பாணம்.(27726)

## கார் விற்பனைக்கு

3ஸ்ரீ தொடர் இலக்கமுடைய பாவ னையில் உள்ள வொக்ஸ்வகன் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.வீரசிங்கம், மயான வீதி, தாவடி வடக்கு, தாவடி. (C/32980)

## காணி விற்பனைக்கு

பெரியவிளான், பண்டத்தரிப்பு வீதி யில் பெரியவிளான் பிள்ளையார் கோயிலுக்கு அண்மித்துள்ள வீடும் கிணற்றுடன் அமைந்துள்ள காணியும விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: அ.யோ.சவுந்திர நாயகம் (சந்திரன்), St.Henry's கல்லூரி வீதி, இள வாலை. (27703)

## காணியும் வீடும் விற்பனைக்கு

கரம்பொன் மேற்கு, முருகமூர்த்தி கோயிலுக்கு அருகில் ஒரு வீடும், 10 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி செ.சாம் பவி, 14, செல்லர் ஒழுங்கை, செம் மணி வீதி, நாயன்மார்கட்டு. தொலை பேசி இல. 0712 504020 (27754)

## வீடு விற்பனைக்கு

ஆடியன்பிட்டி வீதி, சாவகச்சேரி யில் அமைதியான சூழலில் 5 பரப் புக் காணியுடன் கூடிய வீடு (கிணற் றுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு களுக்கு: திருமதி அபாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), பாலகிரி, கல்லடி ஒழுங்கை,சாவகச்சேரி. (27592)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள விலை 44/=, அதிவிசேட Prima பேட் டுக்குஞ்சுகள் விலை 65/=, 02.02.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடமும் பருத்தித்துறைக்கிளையிலும் பெற்றுக கொள்ளும் Prima குஞ்சுகளுக்கு Prima கம்பனியால் உத்தரவாதம் வழங்கப்படும். (நல்லூர் வீடியோ சென்ரா வளவு),19, முருகேசர் ஒழுங்கை, முத் திரைச்சந்தையடி, நல்லூர்.(27472)

## பொதுநிதி முகாமைத்துவம்

அரச அலுவலர்களின் எல்லா பரீட்சைகளுக்குமான நிதிப் பிரமா ணங்களை உள்ளடக்கிய வினா விடைப் புத்தகம் ரூபா 200/- தொடர்புகளுக்கு: கில்பேட்குணம் (கணக்காளர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), 39, செம்மணி வீதி, நல்லூர் மற்றும் 41/60, ஆஸ்பத்திரி முன் வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர். (27660)

---

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA
### க.பொ.த.உயர்தரம் - 2006 Batch.

க.பொ.த.உயர்தர வர்த்தகம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், (கணிதம்) ஆகிய வகுப்புகளுக்கு புதிதாக அனுமதிபெற விரும்புவோர் எதிர்வரும் 02.02.2004ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து அனுமதி பெறலாம்.

(C-32974)(35-21-19-17) - அதிபர்

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.கதிரன் வயித்தியன் - அரசன் (ஜே.பி.)**

சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.வ.அரசன் 1996ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். மாவட்ட சமாதான நீதிவா னாகச் சேவையாற்றி வருகின்றார். 2003 இல் இவரின் சிறப்பான சேவையைத் தொடர்ந்து அகில இலங்கை சமாதான நீதிவானாக தரம் உயர்த்தப்பட்டுள்ளார். இவரின் சேவை மேலும் மேலும் சிறப் புற்று ஓங்க எல்லாம்வல்ல செல்வச்சந்நிதியான் அருளாசியோடு நலமுடன் வாழ நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யா/சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலை.சண்டிலிப்பாய். (27756)(34-19-11-21)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 20 - 01 - 1938



உதிர்வு 31 - 12 - 2003

பண்டத்தரிப்பு, செட்டிகுறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் சிவசம்பு மகாதேவன்

**அன்போடும் பண்போடும் இவ்வுலகில் வாழ்ந்து மறைந்தீர்**
**ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.**

*ஓம்சாந்தி!*

எமது நல்வாழ்வுக்காக இறுதிவரை அயராது உழைத்த எமது அன்புத் தெய்வமாகிய அமரர் சிவசம்பு மகாதேவன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் வெளிநாடு களிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர் களுக்கும் மலர்வளையங்கள் வைத்து அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இன்று (29-01-2004) வியாழக்கிழமை கன்னியாவில் இடம்பெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் தொடர்ந்து நாளை (30.01.2004) வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
புனிதவதியார்,
1127, பாலையூற்று,
திருகோணமலை.
(சி-32979)(26-19-11-21)

என்றும் உங்கள் நினைவாகவே வாழும்:
**அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

---

யாழ். நகரில் — காணத் தவறாதீர்கள்!

முதன்முதலாக

## பொருட் கண்காட்சியும் மணப்பெண் அலங்காரக் காட்சிகளும்
## 01-02-2004 ஞாயிறு

காலை 10.00 மணிக்கு கண்காட்சி ஆரம்பம்.

பிற்பகல் 3.00 மணியளவில் ...............

எல்லோரையும் வியக்க வைக்கும் வகையில் ▲ இந்து ▲ கிறிஸ்தவ ▲ பௌத்த ▲ குஜராத்தி மணப்பெண்கள் வர்ண மின் ஒளியில் கண்கவர் அலங்காரக் காட்சிகள் இடம்பெறும்.

☞ இடம் மாற்றம்: நுழைவுச் சீட்டில் வீரசிங்கம் மண்டபம், யாழ். மத்திய கல்லூரி யாக இடம் மாற்றஞ்செய்யப்பட்டுள்ளது.

– பொஞ் நிறுவனத்தின் மாணவர்கள்.

விளம்பர அனுசரணை: **சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 2567.
(C/32982)(34-11-19-21)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது தர்மகர்த்தா சபையின் உறுப்பினரும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருமாகிய

திரு.ச.பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி நன்னிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**


அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (27758)(26-11-21-17)

தலைவர், தர்மகர்த்தா சபை,
ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோயில்
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்)

---

## கண்ணீர் அஞ்சலி



மணற்காட்டைச் சேர்ந்தவரான
சுவக்கீன் சம்மாட்டி என அன்பாக அழைக்கப்படுகின்ற

### அந்திரேஸ் வேதநாயகம்

அவர்களின் மறைவு எமக்கு ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் அளிக்கின்றது. இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன் னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை இறைஞ்சுகிறோம். பிரிவால் துயருறும் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

★ இவரது ஆத்மசாந்திக்காக மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மணற்காடு. (27759) (26-21-19-17)

- உறவினர்களும், நண்பர்களும்.

---

## மரண அறிவித்தல்

### அந்திரேஸ் வேதநாயகம்

மணற்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவக்கீன் சம்மாட்டி என்று அழைக்கப்படும் அந்திரேஸ் வேதநாயகம் அவர்கள் 27.01.2004 செவ் வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான அந்திரேஸ், சுவக்கீனம்மாவின் அன்பு மகனும் மேரிறெஜீனாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லீனப்பு, இரத்தினம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திரேசம்மா, மரியநாயகி (கொழும்பு), அந்தோனிக்கம்மா பிறான்சிஸ்கம்மா (செம்பியன்பற்று) ஞானப பிரகாசம் (மணற்காடு) காலஞ்சென்ற மரியபுஸ்பம் யேசுதாஸ் (இத்தாலி), ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அடைக்கலம் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை, மரிசிலின் காலஞ்சென்ற சவரிமுத்து, பினசம், யோசேப்பு, தங்கமலர் ஜெராட், ஜெயமணி, லோறன்ஸ் பியதாஸ் (கனடா), வின்சன் குணம் (கனடா), ஜெயம் (இத்தாலி), இருதயராஜ் (இத்தாலி) ஆகியோ ரின் மைத்துனரும் ஜோர்ச் ஸ்கடர்மன் (மணற்காடு), ஜோர்ச் எட்வேட் (லண்டன்), மேரி ஜெயபமலின் பிறேமா (இத்தாலி), காலஞ்சென்ற யூலியற் ஜெசீமா, கனிமா (மணற்காடு), ஜெனிமா (லண்டன்) காலஞ்சென்ற ராஜ ரூபன் கனியூட் (மணியரசன்), றகீமா (மணற்காடு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரெலா (லண்டன்), லடீஸ்லாஸ் (இத்தாலி), சாந்தகுமார் (மணற்காடு) டேவிற்ராசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டலூசியன், சதுாசன், டிலக்ஷன், டினோசன், சுலக்ஷன் செரோடியன், மயூரி, ஸ்ரெபானியா, யூலியா, சௌமியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (29.01.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுத்து நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
*மணற்காடு* (27760)(35-21-11-17) **மனைவி, பிள்ளைகள்.**

---

## நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

### 4ஆம் ஆண்டு

தோற்றம் 10 - 09 - 1927



மறைவு 02 - 12 - 1999

திருமதி
**சிவகாமிஅம்மா செகராசசிங்கம்**

உலகமெல்லாம் வள்ளலாய்
இருந்து வாரி வழங்கிய
உன் இளைய மகனின் சேவை
இனிப்போதுமென எண்ணி
உன்னுடன் அழைத்துக்
கொண்டாயோ! தாயே!

### 3ஆம் ஆண்டு

தோற்றம் 04 - 09 - 1949



மறைவு 31 - 01 - 2001

திதி: 28.01.2004

அமரர்
**குணசிங்கம் செகராசசிங்கம்**

சிங்கத்தின் வம்சத்தில் சுடர்
தங்கம் போல் வந்துதித்த
என் செல்வமே! எம்
குலக்கொழுந்தே!
பங்கம் யார் இழைத்தார் நாம்
உனைப்பிரிய?

*"சந்திரோதயம்"*
*வதிரி, கரவெட்டி.*

(27446)(35-21-19-11)

உங்கள் பிரிவால் வருந்தும்:
**உற்றார், உறவினர்.**

யாழ்ப்பாணம்

### திருச்சபைகளின் ஒன்றிப்பு வார இறுதிநாள் நிகழ்வு

# கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் தென்னிலங்கையில் அதிகரித்து வருகின்றன

## பேராயர் ஜெபநேசன் கவலை தெரிவிப்பு

குருநகர்,ஜன.29

தென்னிலங்கையில் கிறிஸ்தவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆயா கலாநிதி சு.ஜெபநேசன் தெரிவித்தார்.

திருச்சபைகளின் ஒன்றிப்புவார இறுதி நாள் வழிபாட்டை யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட ஒன்றிப்புக்கான ஆணைக்குழுவும் யாழ் கிறிஸ்தவ ஒன்றியமும் ஒழுங்குபடுத்தியிருந்தன.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு அருளுரை நிகழ்த்திய தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் மேலும் தெரிவித்ததாவது:-

நான் கடந்த சில தினங்கள் கொழும்பில் நின்று அண்மையில்தான் யாழ்ப்பாணத்துக்கு வந்தேன். தென்னிலங்கையில் கிறிஸ்தவர்களுக் கெதிரான வன்முறைகள் அதிகரித்துவருகின்றன. தென்னிலங்கையில் இதுவரை கிறிஸ்தவர்களின் 107 தேவாலயங்கள் தாக்கிச் சேதமாக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பான விவரங்கள் எதுவும் பத்திரிகையில் வெளிவராமல் உள்ளன.

தென்னிலங்கையில் பதற்றநிலை நிலவிவருகிறது. 1983இல் நடைபெற்ற இனக்கலவரம் போன்று, தென்னிலங்கையில் உள்ள கிறிஸ்தவர்களின் விவரங்களை மதவெறியர்கள் திரட்டி வருவதை அங்குள்ள கிறிஸ்தவர்களது தகவல்களிலிருந்து அறிய முடிந்தது. கிறிஸ்தவர்கள் மீது நடைபெறும் தாக்குதல் சம்பவங்களை பொலீஸார் அறிந்திருந்தும் வன்முறையாளர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க அவர்கள் முன்வரவில்லை.

தென்னிலங்கையில் எமது மதத்துக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்நிகழ்வு எமக்கு ஒரு முன்மாதிரியாக அமைய வேண்டும். கிறிஸ்தவ சமயங்கள் அனைத்தும் இன்றைய காலகட்டத்தில் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும். இன்று நடைபெறும் இந்த ஒன்றிப்பு வழிபாட்டில் அனைத்துக் கிறிஸ்தவ, கத்தோலிக்க சபைகளும் ஒன்றித்து வழிபாட்டில் கலந்து கொண்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும். கிறிஸ்தவர்களும், கத்தோலிக்கர்களும் தற்போது இருவகையான வேதாகமத்தைப் பயன்படுத்தினாலும் இருமதத்தவர்களும் வெகுவிரைவில் ஒரே வேதாகமத்தைப் பயன்படுத்தக் கூடிய செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன - என்றார்.

இந்நிகழ்வில் அருளுரை நிகழ்த்திய கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கூறியதாவது:-

தென்னிலங்கையில் எமது மதத்துக்கெதிராக வன்முறைகள் நடைபெற்று வருவதைப் போலவே யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவர்களைப் புறக்கணிக்கும் நிலை தோன்றி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்தகைய புறக்கணிப்புச்செயல் எமக்கு மிகுந்த மனவேதனையைத் தருவதாக உள்ளது.

இலங்கையில் உள்ள இரு இனங்களையும் ஒற்றுமைப்படுத்தத் தமது முயற்சியை எடுத்த கிறிஸ்தவ மதத்தவர்களைப் புறக்கணித்து ஒதுக்கும் நிலை தோன்றிவருவது கவலைப்பட வைக்கிறது. எமக்கிடையே ஒற்றுமை ஏற்படவேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசியமானது என்றார்.

இந்த ஒன்றிப்பு வழிபாட்டில் தென்னிந்திய திருச்சபை, மெதடிஸ்த சபை, றோமன் கத்தோலிக்க சபை, பப்ரிஸ்ட் சபை, டச் சீர்திருத்தச் சபை, இரட்சணிய சேனை ஆகியவற்றின் மக்கள், மதகுருமார, மதத்தலைவர்கள், கன்னியாஸ்திரிகளும் பெருமளவில் கலந்துகொண்டார்கள்.

(ம-51)

# மத்தேகொட தேவாலயம் மீது குண்டர்கள் கோஷ்டி தாக்குதல்!

பிலியந்தலை மத்தேகொடப் பகுதியிலுள்ள தேவாலயம் ஒன்று நேற்று முன்தினம் இரவு குண்டர்கள் குழு ஒன்றால் தாக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வானொன்றில் வெள்ளை சேர்ட்டும் தலையில் கறுப்புப்பட்டியும் அணிந்து வந்த சுமார் இருபது பேரைக் கொண்ட குண்டர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் என சமபவத்தை நேரில கண்டவர்கள் தெரிவித்தனர்.

தேவாலயத்துக்குள் புகுந்தவர்கள் அங்கிருந்த திருவுருவப்படங்கள் உட்பட உருவச்சிலைகளையும் அடித்து நொறுக்கியுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

தாக்குதலில் ஈடுபடுபவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ள போதிலும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

பொலீஸாரும் இந்த விடயத்தில் அசட்டையாகவுள்ளனர் என கிறிஸ்தவ அமைப்புகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இம் மாதத்தில் இடம்பெற்ற மூன்றாவது சம்பவம் இதுவாகும்

(ஐ-4)



சமுர்த்தி சந்தைப்படுத்தல் பிரிவின் நிதிமூலம் சிறுதொழில் முயற்சியில் ஈடுபடும் சமுர்த்திப் பயனாளி ஒருவருக்குத் தேவையான பொருள்களை வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் வழங்குவதையும் அருகில் சமுர்த்தி முகாமையாளர் திருமதி ச.கருணாநிதி நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: வட்டுக்கோட்டை செய்தியாளர்)

# பொலீஸாரின் ஆயுதங்கள் பலவும் பாதாள உலகக் கும்பல்கள் வசம்!

## பொலீஸ்மா அதிபருக்கு முறைப்பாடு

கொழும்பு,ஜன.29

பொலஸ் திணைக்களத்தின் ஆயுதக்களஞ்சியத்தில் இருந்து பெறப்பட்டவை என்று கருதப்படும் ஆயுதங்களை பாதாள உலகக் கும்பல்கள் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து பொலீஸ் நிலையங்களில் உள்ள அனைத்துரக ஆயுதங்களின் விவரங்களையும் சேகரிக்கும்படி பொலஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

சமீபத்தில் தெக்கத்தன என்ற இடத்தில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸாரால மீட்கப்பட்ட ஆயுதங்களில் கிரிந்திவெல பொலீஸ் நிலையத்திற்குச் சொந்தமான ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றும் அடங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்தே அனைத்துப் பொலீஸ் நிலையங்களிலும் உள்ள ஆயுதங்களின் விவரங்களைத் திரட்டுமாறு உத்தரவிடப்பட்டது.

தற்போது பாதாள உலகக் கும்பல்களிடம் சட்டவிரோதமாக 40 ஆயிரத்துக்கும் அதிகமான ஆயுதங்கள் கைவசம் உள்ளன என்று கருதப்படுகிறது.

(ஒ-து)

### பொங்குதமிழில் கலந்து கொண்டதற்காக

# சந்திரசேகரனை தேசப்பற்று இயக்கம் பதவி நீக்கக் கோருவது முறையற்றது!

கொழும்பு,ஜன.29

அமைச்சர் பெ.சந்திரசேகரனை அமைச்சர் பதவியில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ள தேசப்பற்று இயக்கத்தின் செயல் ஆரோக்கியமற்றது.

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையகத் தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் பேச்சாளரான எஸ்.பி.அந்தோனிமுத்து விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டமைக்காக அமைச்சர் சந்திரசேகரனை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்குமாறு தேசப்பற்று இயக்கம் பிரதமரைக் கேட்டிருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் எஸ்.பி.அந்தோனிமுத்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பது:-

எமது அமைச்சர் இவ்வாறான நிகழ்வில் கலந்து கொள்வது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள் கலந்து கொண்டுள்ளார்.

மட்டக்களப்பில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்வில் அமைச்சர் பெ.சந்திரசேகரன் மட்டுமன்றி பிரதமரின் ஊடகத்துறை இயக்குநர் மற்றும் பல அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டுள்ளனர். ஆனால் அமைச்சர் பெ.சந்திரசேகரனை மட்டும் குறிப்பிட்டு நடவடிக்கை எடுக்குமாறு கூறியுள்ள இயக்கத்தின் செயல் வருந்தத்தக்கது.

- இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அம்பாறை கரையோரப் பிரதேசத்தில்

# தேர்தலில் இறங்குவதா, இல்லையா? வேட்பாளர்கள் நிச்சயமற்ற நிலையில்!

அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் பெப்ரவரி 21 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா? அல்லது மீண்டும் ஒத்திவைக்கப்படுமா? என்ற நிச்சயமற்ற நிலையால் பிரசாரப் பணிகளை மேற்கொள்வதா அல்லது கைவிடுவதா? என்பதைத் தீர்மானிக்க முடியாத நிலையில் வேட்பாளர்கள் உள்ளனர்.

அம்பாறை மாவட்டக் கரையோரப பிரதேசத்தில் உள்ள ஏழு உள்ளூராட்சி சபைகளுக்கும் பெப்ரவரி 21 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கின்றார். அதனைத் தொடர்ந்து அங்கு தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. வேட்பாளர்களும் தேர்தல் பிரசாரப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டனர்.

இந்நிலையில் அம்பாறை மாவட்ட கரையோரப் பகுதியில் தேர்தல் நடக்காது என ஐ.தே.க. பிரதித்தலைவரான அமைச்சர் கருஜயசூரிய அறிவித்ததைத் தொடர்ந்து வேட்பாளர்கள் சோர்வடைந்துவிட்டனர். இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் கட்சித் தலைவரான அமைச்சர் ஹக்கீமிடம் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

நிச்சயமாக இத்தேர்தலை அரசு நடத்தியாக வேண்டும். இல்லாவிட்டால் தனது அமைச்சுப் பதவியை ராஜினாமாச் செய்து மு.காவின் பலத்தை நிரூபித்துக் காட்டுவேன் என்று அமைச்சர் ஹக்கீம் சூளுரைத்துள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணி, அஷ்ரப் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி எம்பிக்கள் ஆகியோர் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் தேர்தலை நடத்தக்கூடாது எனவும் புதியவேட்புமனுக்கள் கோரப்பட்டு வடக்கு - கிழக்கு முழுவதும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகியோரைக் கேட்டிருக்கின்றனர்.

# யானையின் கால்களில் சிக்கியும் உயிர் தப்பினார்

## விவசாயியின் துணிச்சல்

புத்தளம்,ஜன.29

தோட்டத்தினுள் இரவில் புகுந்த காட்டு யானையின் கால்களுக்கிடையில் சிக்கிக் கொண்ட விவசாயி ஒருவர் தனது புத்திசாதுரியத்தால் உயிர் தபபினார்.

புத்தளம் - குருநாகல் பாதையில 3ஆம் மைல் அருகே அமைந்துள்ள மருதமடுவேம்பிலிருந்து அடிக்கடி காட்டு யானைகள் வந்து தோட்டங்களை நாசம் செய்துவிட்டுப் போவது வழக்கம்.

கடந்த வியாழக்கிழமை இப்பகுதியிலுள்ள தோட்டம் ஒன்றுக்குள் நள்ளிரவு வேளையில் காட்டு யானையொன்று புகுந்தது. விவசாயி எம். மைக்கல் (வயது-44) வீட்டை விட்டு வெளியே வந்தபோது தற்செயலாக யானையின் நான்கு கால்களுக்குமிடையே அகப்பட்டுக்கொண்டார்.

உடனே, மைக்கல் யானையின் நான்கு கால்களுக்குமிடையே அங்கும் இங்குமாக மாறிமாறி பாய்ந்து அதனை ஏமாற்றினார். எரியும் விறகுக் கட்டை ஒன்றை எடுத்து வருமாறு மனைவியிடம் கூறினார்.

அவ்விதமே மனைவியும் ஒரு எரியும் விறகுக் கட்டையை எடுத்து வந்து நெருப்பினால் யானையின் பின்னங் காலில் சுட்டார். இதனை எதிர்பார்த்திராத காட்டு யானை அலறிப் புடைத்துககொண்டு வந்த வழியே ஓடியது. மைக்கல் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்.

மைக்கலின் புத்திசாதுரியமும் மனைவியின் தைரியமும் ஏனைய கிராமவாசிகளுக்குப் புதுவழி காட்டியிருக்கின்றன.

(ம)

# நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மட்டக்களப்புக்கு இருநாள் விஜயம்

## கருணா அம்மானையும் சந்தித்தார்

மட்டக்களப்பு,ஜன.29

நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மட்டக்களப்புக்கு இருநாள் விஜயத்தினை மேற்கொண்டு திரும்பினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நோர்வே அரசால் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அவர் பார்வையிட்டதுடன், நோர்வே அரசின் நிதியுதவியுடன் புரைமைக்கப்படும் பல்வேறு பாடசாலைகளையும் சென்று பார்வையிட்டார்.

கடந்த திங்கட்கிழமை அரச அதிபர் இமௌனகுருசாமியைச் சந்தித்து உரையாடிய நோர்வே தூதுவர், நேற்றுமுன்தினம் படைத்தரப்பினரையும், மட்டக்களப்பில் உள்ள மாற்று அரசியற்கட்சியினரையும் சந்தித்துப்பேசினார்.

விடுதலைப் புலிகளின் கரடியனாறு தேனக அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் மூத்ததளபதி கேணல் கருணா அம்மானைச்சந்தித்து மட்டக்களப்பு மாவட்ட நிலைவரம்பற்றி அவரிடம் கேட்டறிந்தார். இச்சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றது.

இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து, தமிழர்களின் சுய உரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென கருணா அம்மான் இச்சந்திப்பில் வலியுறுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4)

# வடபகுதி அகதிகளுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும்

## மன்னார் வைபவத்தில் நூர்டீன் மசூர்

வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் இழந்த சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

- இவ்வாறு வன்னிப் புனர்வாழ்வுக்கு உதவும் அமைச்சர் நூர்டீன் மசூர் தெரிவித்தார்.

வீதி வாரத்தை முன்னிட்டு இரண்டு நாள் விஜயத்தை மன்னாருக்கு மேற்கொண்டு மன்னார் நகரில் பல்வேறு வீதி புனரமைப்பு வேலைகளைக் கடந்த சனிக்கிழமை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மன்னார் உப்புக்குளம் அல்-அஸ்ஹர் இஸ்லாமிய நிலையத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

அடுத்த கட்டப் பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்ற வேண்டும். அதில் அவர்கள் இழந்தவற்றை அரசோ, விடுதலைப் புலிகளோ அல்லது வேறு நிறுவனங்களோ வழங்கவேண்டும். இதை நாங்கள் முன்வைப்போம்.

நான் இறைவனுக்குப் பயந்தே எல்லா இனத்துக்கும் நியாயமான முறையில் சேவையாற்றி வருகின்றேன்.

எமது மக்களினதும் இளைஞர்களினதும் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பல விடயங்களை ஆராய்ந்து திட்டம் தீட்டி வருகின்றோம்.

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-29245)


## 'உலகமயமாக்கலும் நசிய பொருளாதாரக் கொள்கையும்'

யாழ். பல்கலைக்கழக
பொருளியல்துறைத் தலைவர்
**ப.சிவநாதன்**
அவர்கள் உரையும் கலந்துரையாடலும்
இடம் : யாழ். நாவலர் கலாசார மண்டபம்
காலம்: ஜனவரி 30, வெள்ளி மாலை 3.00 மணி
ஏற்பாடு: விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்.

(27626) (12-17)

## 32 மாணவர்களுக்கு செயலமர்வு

தென்மராட்சி,ஜன.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10 இல் கல்வி பயிலும் 32 மாணவர்கள் 'சிசுசவிய' புலமைப் பரிசில் திட்டத்திற்கு கல்வி வலயத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் தரம் 9 இல் பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-117)

## கணிதபாட செயலமர்வு

தென்மராட்சி,ஜன.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் யுனிசெவ் அனுசரணையுடன் நடத்தப்படும் தரம் 7வகுப்புக்கான கணிதபாட செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 7 வகுப்புக்களில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் செயற்பட்டறிக்கையுடன் வருகை தருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஜ-117)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம் ஓட்டுநர் தேவை

15வருடத்திற்கு மேலாக ஓட்டுநர் பணியில் பட்டறிவு உள்ள ஆண்பாலார் விண்ணப்பங்களுடன் நேரில் வருகைதருமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள்:-
1. கல்வித்தகைமை:- ஆண்டு 10
2. அகவை:- 48இற்குள் இருத்தல் வேண்டும்.
3. நிறை:- 53 கிலோ
4. உயரம்:- 05 அடி 05 அங்குலம்

குறிப்பு:-
1. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு 01.02.2004 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகிலுள்ள தமிழீழப் போக்கு வரவுக் கழகம் நடுவப்பணிமனையில் நடைபெறும்.
2. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் வருக.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு

(27645) (26-12-17)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 06 - 05 - 1908



இறைமகிமைக்குள் 29 - 01 - 2000

**திருமதி மேரி அமிர்தம்மா (ஈ)பக்கஸ்**
(மேரி அக்கா)

(இயேசு) நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்
(யோவான் 11-25)

அன்புடன் நினைவு கூரும்:
தியாகராஜா, சரஸ்வதி,
குமரேசு கமலாதேவி
கந்தையா நாகம்மா [பெறாமக்கள்]

வெஸ்லி லேன்,
கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

(27441)(12-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



1940முதல் 1948வரை பிரிட்டிஷ் இராணுவத்தில் கடமையாற்றிய போது



இலங்கைப் பொலீஸ் சேவையில் 1948 முதல்



அழகானந்த ஜோதி அவர்களின் குருநாதர் ஞானவள்ளல் பரஞ்சோதி மகான்



சுவாமி அழகானந்த ஜோதி

அமரர் முத்தையா அழகரத்தினம் என அழைக்கப்பட்ட
**சுவாமி அழகானந்த ஜோதி அவர்கள்**

தோற்றம்: 22.10.1922 ஜோதியில் சங்கமம்: 30.12.2003

முன்னாள் பிரித்தானிய இராணுவ வீரரும் ஓய்வுபெற்ற இலங்கைப் பொலீஸ் உத்தியோகத்தரும் ஆகிய சுவாமி அழகானந்த ஜோதி அவர்கள் 30-12-2003 இல் இறைஜோதியில் சங்கமித்தார்.
எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிரியைகள் இன்று (29-01-2004) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மஜோதி பூசையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
அ. கருணாமூர்த்தி *(மகன்)*,
மூத்தநயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(27632) (26-12-17)

- குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 24 - 05 - 1923



அரன் அடியில் 09 - 02 - 2003

திருமதி பண்டிதர்
**சிவ.ஆறுமுகம்இராசம்மா** (யா. தாவடி)
திதி: 29-01-2004

ஆண்டுபல வானாலும் அம்மாவுன் பாசம்
ஈண்டெமை விட்டென்று மேகாது - வேண்டும்
கணவனுடன் பிள்ளைகள் மருகருடன் பேரர்
உணர்வதனி லுன்னுருவே தான்
"மங்கல மிரண்டுமுற வாழ்வுகந்தாய் மற்றிறையால்
எங்குறினும் வாழ்க இனிது"

E.S.FARNANDO-M.W.
51-1 WELLAWATTA
(27141) (26-12-17)

மறைந்த மனைவிளக்கின்:
அன்பு - கணவர், பிள்ளைகள்,
மருகர், பேரப்பிள்ளைகள்.


## கூரை அமைப்பில் புதிய அலை
## அன்டன் சுபர் ஷெல்டா

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




உங்களின் கூரைக்குப் பரிகாரம்

**அன்டன் சுபர் ஷெல்டா**
- 25 மி.மி. கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்.
- துரு பிடிக்காதது
- சுகாதார இடையூறு அற்றது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

* நீடித்த பாவனைக்குப் பொருந்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள்.
* இதனை விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ள மறவாதீர்கள்.


உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5 பெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics


## நீங்காத நினைவில் ஓராண்டு

மலர்வு 28 - 12 - 1951



உதிர்வு 09 - 02 - 2003

**அமரர் இராமநாதர் குலவீரசிங்கம்**

ஓராண்டு வந்துவிட்டாலும் எங்களை
அன்பாகவும், பண்பாகவும், பாசமாகவும் அரவணைத்து
சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த அன்புத் தலைவரே,
அருமைத் தந்தையே உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சைவிட்டு அகலவில்லை

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்*

(27735)(35)

மனைவி, மக்கள்.

# நாட்டு வழக்கிலும், ஏட்டு வழக்கிலும் சிதையாமல் வாழ்வது தமிழ்மொழியே!

## வலி.வடக்கு கலாசார பேரவைத் தலைவர் உரை

தெல்லிப்பழை,ஜன.29

உலகில் தொன்மைமிகுந்ததாகக கருதப்படும் ஐந்துமொழிகளிலும் இன்றும் சிதையாது நாட்டு வழக்கிலும், ஏட்டு வழக்கிலும் வாழும் மொழி நம் தமிழ்மொழிதான்.

- இவ்வாறு கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை வலி.வடக்கு கலாசார பேரவை நடத்திய கலாசார விழா விற்கு தலைமைதாங்கி உரையாற்றிய அதன் தலைவர் வை.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அளவெட்டி, பன்னாலை, இளவாலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களால் அளவெட்டி சுப்பிரமுனிய சுவாமிகள் ஞாபகார்த்த கலாசார மண்டபத்தில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது அன்று மாலை 3மணிக்கு அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் ஆலய முன்றிலிலிருந்து ஆரம்பமான கலாசாரப் பேரணி மண்டபத்தை நோக்கிச் சென்றது.

ஊர்வலத்தின் முன்னால் தமிழரின் பாரம்பரியத்தைச் சித்திரிக்கும் காவடி நடனம், கரகம், கும்மி போன்றவற்றைப் பாடசாலை மாணவர்கள் ஆடிக்கொண்டு சென்றனர். அவர்களின் பின் விருந்தினர்கள், கலைஞர்கள், பொதுமக்கள், மாணவர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

மங்கள விளக்கினை இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல், வலி.வடக்குப் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா உட்படப் பலர் ஏற்றினார்கள். தொடர்ந்து அளவெட்டி கேதீஸ்வரன் குழுவினர் மங்கல இசைமுழங்க அதன பின் கலாசார அலுவலர் அருட்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய வலி.வடக்கு கலாசார பேரவைத் தலைவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

உலகின் முதுமொழிகள் ஐந்தில் நான்கு மொழிகள் பல்வேறு மாற்றங்களை அடைந்துவிட்டன. அவற்றின் பேச்சுவழக்கிலும் எழுத்து வழக்கில் அதிக வேறுபாடுகள் உருவாகிவிட்டன. ஆனால், இன்றும் முதுமையடையாது பொலிவோடும் தெளிவோடும் வாழும் மொழி நம் தமிழ் மொழி மட்டுமே. அதனால்தான் எமது மொழியைக் 'கன்னித் தமிழ்' என்று போற்றுகிறோம் - என்றார்.

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் தமது உரையில் -

கலாசாரக் களங்களிலிருந்து தமிழ்ப்பண்பாட்டைப் பாதுகாக்க தமிழர்கள் புத்துணர்வுடன் செயற்படத் தொடங்கிவிட்டனர். ஜேர்மன் பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழி மூலக் கல்வி நடத்தப்படுவது இதற்கு ஓர் உதாரணமாகும் - என்றார்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் ந.வேதநாயகன், வலி. வடக்கு பிரதேச செயலர் க.குணராசா, தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசா, அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (ம-8-150)



பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூ.சங்கங்களின் கொத்தணியில் அங்கம் வகிக்கும் சங்கங்கள் இணைந்து முன்பள்ளிச் சிறார்களுக்குக் கடந்த மாதம் இலவசச் சீருடை வழங்கிய நிகழ்வில் பொதுமுகாமையாளர் கி.குணரட்ணம் சிறுவன் ஒருவனுக்குச் சீருடை வழங்குவதைப் படத்தில் காணலாம். ஆசிரியை ரீ.சித்திராவும் படத்தில் உள்ளார். (ம-95)

## துர்க்கா கோட்டம் பெப்.5 திறப்பு

வலி.வடக்கு,ஜன.29

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய நிர்வாகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட துர்க்கா கோட்டத்தின் திறப்பு விழா எதிர்வரும் 5ஆம் திகதி காலை 8.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியினால் இந்த நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்துக்கு வரும் இந்துக்குருமார் மற்றும் மதத்தலைவர்கள் தங்குவதற்காகவே துர்க்கா கோட்டம் கட்டப்பட்டுள்ளது.

இதேநேரம் வெளிமாவட்டங்கள் மற்றும் வெளிஇடங்களில் இருந்து வரும் யாத்திரிகர்கள் தங்குவதற்காக சுமார் 75லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் யாத்திரிகர்கள் மண்டப வேலைகளும் துரிதகதியில மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-86)

# குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## அனலைதீவு இறங்குதுறையில் கொங்கிறீற் பாலம் அமையுங்கள்

### அப்பகுதி மக்கள் சார்பில் கோரிக்கை

ஊர்காவற்துறை,ஜன.29

அனலைதீவு இறங்குதுறையில் அமைக்கப்பட்டுள்ள மரப்பாலத்தை அகற்றி அதற்குப் பதிலாக் கொங்கிறீற்றிலான பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு அனலைதீவு மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது படகுகள் அணைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் மரப்பாலம் சேதமடைந்துள்ளது. வீதிக்கும் மரப்பாலத்திற்கும் இடையேயுள்ள கற்கள் கடலிப்பினால் அகன்றுள்ளன. மண்மூடைகளைக் கொண்டே மேற்படி இடைவெளி நிரப்பப்பட்டிருந்தது. அவையும் தற்பொழுது கடலிப்புக்கு இலக்காகியிருப்பதால் வீதிக்கும் மரப்பாலத்திற்கும் இடையேயான வெளி அதிகரித்து வருவதுடன் படகுகளில் ஏறி இறங்கும் பயணிகளுக்கு இது ஆபத்தை விளைவிப்பதாகவும் உள்ளது.

இந்நிலை குறித்து அண்மையில் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அப்பகுதி கிராம அலுவலா வ.வடிவழகையன் மேற்படி பாலம் உடன் அமைக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துக்கூறியதுடன் அனலைதீவு பிரதான வீதியில் இன்னமும் திருத்தப்படாத நிலையில் உள்ள 600 மீற்றர் பாகத்தைத் திருத்தித் தருமாறும் கோரிக்கை விடுத்தார். (ம-16)

## சிரமதானம்

சண்டிலிப்பாய்,ஜன.29

இளவாலை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை வளவை சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மதிய உணவும் இவர்களால் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 4ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு பொலீஸார் இந்த சிரமதானப் பணியினை மேற்கொள்ளவுள்ளனர். (ம-135)

## விழிப்புணர்வுச் சுவரொட்டி

கரவெட்டி,ஜன.29

எய்ட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கையாக வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கம் பொதுமக்களுககு முக்கிய வேண்டுகோள் தாங்கிய சுவரொட்டி ஒன்றினை வெளியிட்டுள்ளது.

வீடுகளில் சென்று சிகை அலங்காரம் செய்யும் சிகை அலங்கரிப்பாளர்கள் ஒரே சவரக்கத்தியினால் பலருக்குச் சிகை அலங்காரம் செய்வதால் எய்ட்ஸ் நோய் பரவும் அபாயம் உண்டு. இதன் காரணமாக வீடுகளில் சென்று அலங்காரம் செய்வது சுகாதார சேவையினரின் அறிவுறுத்தலுக்கமை, தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று மேற்படி சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட சிகை ஒப்பனை நிலையங்களிலும் புதிய சவர அலகு (பிளேட்) பாவிக்கப்படுகின்றனவா என கண்காணித்து சுகாதாரமான முறையில் நோயற்ற வாழ்வினை வாழுமாறு பொதுமக்களுக்கு அத்துண்டுப் பிரசுரம் அறிவுறுத்தியுள்ளது. (ம-70)

## வடமராட்சி கிழக்கு மீனவர் கடற்புலிகளுடன் சந்திப்பு

வடமராட்சி,ஜன.29

வடமராட்சி கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி மீனவர்களுக்கும் கடற்புலிகளின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபனுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

சந்திப்பில் கலந்துகொண்ட மீனவர்கள் தெரிவித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாகத் தீபன் தெரிவித்தார்.

இப்பகுதி மீனவர்களின் அத்தியாவசிய தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கென குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.அழகராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீபன் கலந்துகொண்டார்.

கடந்த வருடம் மே மாதம் தொடக்கம் வடமராட்சி கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்துவரும் குடத்தனை, பொற்பதி, மணல்காடு ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவந்த உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டது. கடந்த 9 மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ள உலர் உணவு நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் -

கடற்றொழிலுக்கான காலம் ஆரம்பமாக இருப்பதால் கடற்றொழிலாளர்கள் கடலுக்குள் நுழைய ஒதுக்கப்பட்டுள்ள இடவசதிகள் (பாடு) போதாமல் இருக்கிறது. இடம்பெயர்ந்த மீனவர்களும், இப்பகுதி மீனவர்களும் தொழில்புரிவதாலும் இராணுவக் காவலரண்கள் இருப்பதாலும் இந்த இட நெருக்கடி நிலவுகிறது. அதனை சுமுகமாகத் தீர்த்துவைக்க வேண்டும் எனவும் கூட்டத்தில் மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கூட்டத்தில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் கே.சூரியகுமாரனும் கலந்துகொண்டு உரையாற்றினார். (ம-173)

## பஸ் சேவை சீரின்மையால் மாணவர் சிரமம்

மாதகலில் இருந்து சங்கானை ஊடாகப் பாடாசலைச் சேவையில் ஈடுபடும் தட எண் 787 பஸ் சேவை சீரின்றி உள்ளதால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த 5 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி இச்சேவையில் பஸ் குறிப்பிட்ட நேரத்திற்கு வருவதில்லை எனவும் -

சில நாள்களில் இச்சேவை இடம்பெறுவதில்லை எனவும் - மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், பருவகாலச் சீட்டால் பயன் இல்லாததோடு பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்ஸில் தம்மை ஏற்றுவதற்கு பஸ் நடத்துநர் மறுப்பதால், தாம் பாடசாலைக்குச் சமுகமளிக்கமுடியாமல் உள்ளதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.(ஒ-29)

### உடுவில் கல்விக்கோட்டத்தில்

## வறிய மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப் பரீட்சார்த்த நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,ஜன.29

உடுவில் கல்விக் கோட்டத்தில் நூறுக்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட வசதி குறைந்த கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப்புற பாடசாலைகளில் கல்விபயிலும் பெரும்பாலான மாணவர்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும், போதிய போஷாக்கு உணவு இல்லாமையால் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதவர்களாகவும் இருப்பதாகக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்தே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

"யூனிசெவ" நிறுவனத்தின் உதவியுடனும், வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் அனுசரணையுடனும் இத்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டால், எதிர்காலத்தில் ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-152)

## மாவிட்டபுரத்தில் தைப்பூசத் திருநாள்

வலி.வடக்கு,ஜன.29

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த தைப்பூசத் திருநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன.

காலை 8.00 மணிக்கு ஸ்னாபனாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மஞ்ச ஊர்திப் பவனி இடம்பெறும். மௌனாஞ்சலிப் பிரார்த்தனையைத் தொடர்ந்து மாகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது.

ஆலயத்திற்குச் செல்லும் அடியார்களுக்கு வாகன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. (ம-86)

## மானிப்பாய் தபாலகத்துக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம்

நீண்ட காலமாக நிரந்தரக் கட்டடம இன்றி இயங்கிவரும் மானிப்பாய் தபாலகத்துக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கட்டடம் அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை சண்டிலிப்பாய பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா மேற்கொண்டுள்ளார்.

மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட காணியொன்றை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், ஆளுநர் ஆகியோரின அனுமதியுடன் இலவசமாகப் பெற்றே தபாலகத்துக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை - மானிப்பாய் தபாலகத்தின் அபிவிருத்திக்கென அமைக்கப்பட்ட குழு செயலிழந்துள்ளது இக்குழு இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென மானிப்பாய் தபாலதிபர் ஏ.அந்தோனிபபிள்ளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்குத தெரிவித்ததையடுத்தே தபாலகத்துக்கு காணி பெறப்பட்டுள்ளது. (ம-8-185)

## மேய்ச்சலுக்கு கட்டப்படும் மாடுகள் களவாடப்பட்டு வெட்டப்படுகின்றன

### ஊர்காவற்றுறையில் அதிகரிக்கும் சம்பவங்கள்

ஊர்காவற்றுறை,ஜன.29

ஊர்காவற்றுறைப் பகுதியில் மேய்ச்சலுக்காகக் கட்டப்படும் மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன எனப் பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு பொதுமக்கள் தமது வளர்ப்பு மாடுகளை மேய்ச்சலுக்காக தரவைகளில் கட்டிப் பராமரித்து வருகின்றனர்.

இவ்வாறு கட்டப்படும் மாடுகளை ஒருசிலர் களவாக அவிழ்த்துச்சென்று ஆள்கள் அற்ற வீடுகளில் வைத்து இறைச்சியாக்கி அவற்றை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்சென்று விற்கின்றனர். கழிவுகளை அங்குள்ள கிணறுகளில் கொட்டிவிடுகின்றனர் என்று மாடுகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் ஊர்காவற்றுறை கல்லொழுங்கை வீதியில் காணாமற்போன தனது வளர்ப்பு மாட்டை தேடிச் சென்ற ஒருவர், தனது மாடு கட்டப்பட்டிருந்த கயிற்றைப் பயன்படுத்தி ஆள்களற்ற வளவில் வேறொரு மாடு கட்டப்பட்டு இருந்ததை அவதானித்தார். அதனை அப்பகுதி கிராம சேவையாளரிடம் ஒப்படைத்தார்.

பின்னர் உரியவர் அதனை அடையாளங்காட்டிப் பெற்றுக்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-16)

# வெள்ளவத்தைச் சம்பவம் தொடர்பாக இளைஞர்கள் நான்கு பேர் கைது!

கொழும்பு,ஜன.29

வெள்ளவத்தையில் பொலீஸாரின மீது தாக்குதல் நடத்திவிட்டுத், துப்பாக்கியை அபகரித்துச் சென்றுவிட்டனர். என நம்பப்படும் நான்கு இளைஞர்கள் கடந்த திங்களன்று நள்ளிரவு துப்பாக்கி மற்றும் கத்தியுடன் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினமிரவு வெள்ளத்தையில் உள்ள பொலீஸ் காவல் நிலையத்திற்குள் புகுந்த சிலர் அங்கு கடமையிலிருந்த பொலீஸாரை கத்தியால் குத்திவிட்டு, பொலீஸாரின் துப்பாக்கியைப் பறித்து, அதே துப்பாக்கியால் அவர்கள் மீது துப்பாக்கிபிரயோகம் செய்து காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இதனையடுத்துப் பொலீஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வெள்ளவத்தையில் உள்ள வீடொன்றில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் பொலீஸாரிடமிருந்து அபகரித்துச் சென்றதாகக் கருதப்படும் துப்பாக்கியும் தாக்குதலுக்கு பயன்படுத்திய கத்தியும் மீட்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டனர்.


# கேள்வி அறிவித்தல்

## உடற்கோப்பு அமைத்தல்

அசோக் லேடன் (Model 166 WB Comet Supper Chassis) வகை புதியலொறிக்கு உடற்கோப்பு அமைத்தலுக்குத் தகுதியான ஒப்பந்தகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்விதாரர் தங்கள் கேள்விகளை 07.02.2004ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக *பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.சங்கம்,காரைநகர்* என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உடற்கோப்பு அமைத்தலுக்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடவும்.

**வேலை விவரம்:**

தேக்கம் பலகை (சதுர அடி)
இரும்பு வேலை (சதுர அடி)
வர்ணப்பூச்சு (சதுரஅடி)
மூலப்பொருள்களுடன் கூலி விவரம்

**தனியாகக் கூலி விவரம்:**

வேலைகள் 60நாள்களில் செய்து முடிக்கப்பட வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
**ப.நோ.கூ.சங்கம்,காரைநகர்.** (சி-32976) (26-11-19-21)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 19 - 09 - 1921



விண்ணில் 30 - 12 - 2003

## திருமதி விசுவாசம் செபமாலை

எங்கள் அன்புச் செல்வமே அம்மா!
பல இன்னல்கள் வந்துற்றபோதும்
உங்கள் பொறுமையென்னும் தியாகத்தால்
எம்மைக் கட்டிக் காத்த குல விளக்கே!
எம்மைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள் அம்மா?
நீர் பெற்றவர்கள் கடல்கடந்து வந்தும்
உம்திருமுகம் காணமுடியாமல் தவிக்கிறோம்
அம்மா நீர் எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்?
உம் செய்திகேட்டு மாளாத்துயரில் வாடுகிறோம்.
அம்மா உங்கள் ஆன்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

நிரந்தர முகவரி:
உரும்பிராய்.
தகவல்:
மருமகன்: யேசுதாசன்.

உங்கள் பிரிவால் வாடும்:
அருட்சகோதரி ஜெயம்
அன்புக் கன்னியர் சபை (வவுனியா),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(27738) (34-19-11-21)


# அபிவிருத்தியை, அமைதியை விரும்பாத ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்ததால் சிக்கல்

## சுதந்திரக்கட்சியின் செயல்பற்றி அமைச்சர் அஸ்வர்

புத்தளம்,ஜன.29

"நாட்டின் அபிவிருத்தியையும், அமைதியையும் விரும்பாத ஜே.வி.பியுடன் சுதந்திரக்கட்சி கூட்டுச் சேர்ந்துள்ளதானது நாட்டில் பலவித சிக்கல்களை ஏற்படுத்தும்."

- இவ்வாறு நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் எச்சரிக்கை விடுத்தார்.

புத்தளம் தொகுதியிலுள்ள 'போதிராஜபுர' குடியேற்றத் திட்டத்தில் 'தீப்பாலோக்க' மின்னொளி வழங்கும் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றியபோது அமைச்சர் அஸ்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அஸ்வர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

இந்த இரு கட்சிகளின் கூட்டினால நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை வருவதற்குப் பெரும் தயக்கம் காட்டுகின்றனர். முதலீட்டாளர்கள் வருகைதராவிட்டால் தொழில் முயற்சிகள் இடம் பெறமாட்டா. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும்.

அமைதியையும் நிம்மதியையும் விரும்புபவர்களுக்கு இக்கூட்டு பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இருண்ட யுகத்தைத் தோற்றுவித்தவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதன் மூலம் சுதந்திரக் கட்சியும் நாட்டு மக்களின் அதிருப்தியை சம்பாதித்துள்ளது. அவர்கள் எதிர்பார்ப்பது போல் ஒருகாலமும் ஆட்சியைப் பிடிக்கமுடியாது. ஏனென்றால், மக்கள் எம்பக்கம் உள்ளனர். மக்கள் சக்தியை மீறி எதுவும் இடம்பெற முடியாது.

எனவேதான், மீண்டும் உறுதிப்படக் கூறுகின்றேன். ஜே.வி. பியும், சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து என்னதான் செய்தாலும் மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மீண்டுமொருமுறை இருண்ட யுகத்தைக் காண மக்கள் விரும்ப மாட்டார்கள்.

- இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## சிறுமியை ஏமாற்றி நகைகள் அபகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

தேங்காய் பிடுங்கித் தருவதாகக் கூறி வீட்டுக்குள் நுழைந்த நபர், அங்கு நின்றிருந்த சிறுமியின் நகைகளை அபகரித்துக்கொண்டு மாயமானார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள கே.கண்ணனின் வீட்டில் இடம்பெற்றது.

இதுதொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-9)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

தெனமராட்சி,ஜன.28

தென்மராட்சி கல்வி வலயத்தில் தரம் - 6 வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் - 6 இற்கான பல பாடநூல் தேர்வு தொடர்பான விவரங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகக் கோட்டக் கல்வி அலுவலர் நா. சத்தியநாதன் அறிவித்துள்ளார். (ஐ-117)


# விற்பனைக்கு

ரெயாட்டா கொ்லா A.30 இனத்தைச் சேர்ந்த வெள்ளை நிறக் கார் (தனிப் பாவிப்பு) விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 021-2263575

(27728)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மீசாலை வடக்கு.
ஸ்ரீ கணபதிப் பிள்ளையார் தேவஸ்தான
பரிபாலன சபைத் தலைவரும்.
இந்து கலாசார அமைச்சின் உதவியாளரும்.
சிறந்த சமூகத் தொண்டருமாகிய

உயர்திரு.

## வல்லி மகேந்திரன்

*அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணஞ் செய்து கொண்டதையிட்டு அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது நற்பணி மேன் மேலும் தொடர பிள்ளையார் அருள்வேண்டி நிற்கின்றோம்.*

ஆலய பரிபாலன சபை
உறுப்பினர்கள்.

(C/32975)(34-19-11-21)



## யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தின் பாராட்டுதல்கள்

"மத்தியின் மகிமை நித்தியம் நிலைக்கும" என்ற மௌன வாக்கியத்திற்கமைய *அதிபரின் நிர்வாகத் திறமையினால் பரீட்சையில் சித்தியடைந்த மத்திய கல்லூரி ஆண்டு - 5 மாண*வர்களை வாழ்த்துவதுடன் அவர்களின் பெறுபேற்றுக்கு அயராது உழைத்த ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கும் பகுதித் தலைவருக்கும் அதிபருக்கும் எங்கள் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

CENTRAL'S GLORY WILL LAST FORENER

- செயலாளர்.

யாழ்.சென்றல்
விளையாட்டுக்கழகம்.

(C/32978)(35-19-11-19)



# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளிப்பிள்ளை பொன்னையா

(இளைப்பாறிய ஆசிரியை)

அச்சுவேலி. இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வறணனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை பொன்னையா அவர்கள் 22.012004 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பத்தினியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையா பொன்னையா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொ.இராமச்சந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற திருமதி கமலஜோஜினி நடராசா (இடைக்காடு), பொ.காகுந்தநாதன் (ஆஸ்திரேலியா), பொ.கமலநாதன் (கனடா), பொ.ஸ்ரீராகவன் (நியூசிலாந்து), திருமதி வி.வனிதரதி (லண்டன்), பொ.வைகுந்தவாசன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் திருமதி மேரி இராமச்சந்திரன் (லண்டன்), பே.நடராசா (இடைக்காடு), திருமதி நான்ஸி காகுந்தநாதன் (ஆஸ்திரேலியா), திருமதி விஜயலட்சுமி கமலநாதன் (கனடா), திரும்தி ரஞ்சனி ஸ்ரீராகவன (நியூசிலாந்து), விஜயசீலன் (லண்டன்), திருமதி தயா வைகுந்தவாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் டானியல் (லண்டன்), அன்றூா (லண்டன்), நற்றாலி (லண்டல்), திருமதி சுமதி முரளிதரல் (ஆஸ்திரேலியா), காயத்திரி (கனடா), கோபி (கனடா), ஜேசன் (லண்டன்), மீரா (லண்டன்), மைக்கல் (ஆஸ்திரேலியா), மதரூபன் (லண்டன்), தர்மிகா (லண்டன்), முரளீதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனுஜனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.01.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வறணனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பே.நடராசா
(மருமகன்).

*வறணன்,*
*அச்சுவேலி.*

(27741)(19-11-21)



# முல்லைமாவட்ட நுண்கலைக் கல்லூரிகள்

## 5ம் ஆண்டு நிறைவுப் பெருவிழா



*காலம்: 31.01.2004 சனிக்கிழமை மாலை 5.00 மணி*
*01.02.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30, மாலை 4.00 மணி*



*இடம் : மு/ வித்தியானந்தக் கல்லூரி கலாமண்டபம், முள்ளியவளை.*

நாட்டிய அளிக்கைகள், ஓவியக் கண்காட்சிகள், தற்காப்புக் கலை நிகழ்ச்சிகள், வாத்திய பிருந்தமும் இன்னிசை நிகழ்வுகளும், சு.கோபிதாசின் வயலின் சோலோ,பரிசளிப்புகள், இன்னும் பல...

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"கலை மக்களுக்காக"*

நிர்வாகம், நுண்கலைக்கல்லூரிகள்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



# அரியாலை கிழக்கில் இயங்கிவந்த இரு பாடசாலைகள் மூடப்பட்டன!

கொழும்புத்துறை,ஜன.29

அரியாலை கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து மீண்டும் அரியாலை மத்தி, கண்டி வீதியில் இயங்கிவந்த இரண்டு பாடசாலைகள் மீண்டும் மூடப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியனவையே இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

இவ்வாண்டு இப்பாடசாலைகள் வழமைபோன்று இயங்கியதுடன் தரம் ஒன்று மாணவர்களுக்கான அனுமதிகளும் வழங்கப்பட்டுவந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை வரை இப்பாடசாலைகள் இரண்டும் தனியார் கட்டடத்தில் இயங்கிவந்தன. இவ்வாரம் முதல் இப்பாடசாலைகள் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப மூடப்பட்டுள்ளன.


இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவின் சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 91 ஆம் ஆண்டு கட்டப்பட்டு 94 ஆம ஆண்டு அரசிடம் கையளிக்கப்பட்டதாகும்.

பூம்புகார் நாவலடிப்பகுதியைச் சேர்ந்த பிள்ளைகள் இப்பாடசாலையில் கல்விகற்று வந்தனர். இப்பகுதி மக்களின் உடல் உழைப்புடன் இணைந்து லெப். நித்தியா கல்விக் கூடம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டு இயங்கிய இப்பாடசாலை மூடப்பட்டதையிட்டு அப்பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

(ஒ-30-86)

## கல்விச்சாலைக் காட்சிகள்



சைவ பரிபாலன சபையினால் நடத்தப்படும் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வின்போது சிறார்களும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களும் எடுத்துக்கொண்ட படம்.




பண்டத்தரிப்பு, வடலியடைப்பு நலன்புரி கல்வி நிலைய முன்பள்ளிச் சிறார்களின் பரிசளிப்பு நிகழ்வின்போது சிறார்களும் ஆசிரியர்களும் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம்.



வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கோ.செல்வவிநாயகம், கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் ஆகியோரை, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம்.



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சாரணர் நிகழ்வில் சாரண ஆசிரியர் எஸ்.கருணாகரன் சாரண மாணவர் ஒருவருக்குச் சின்னம் சூட்டுவதைப்படத்தில் காணலாம்.

*படம்: வடமராட்சி செய்தியாளர்.*

# மூலிகை உணவைக் கைவிட்டதாலேயே தீராத நோய்களுக்கு உள்ளாகும் நிலை

## கேரள வைத்திய நிபுணர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஜன.29

நோய்கள் எமது உடலை அணுகாமல் பாதுகாக்கின்ற அபூர்வ சக்தி மூலிகை உணவுகளுக்கு மிகவதிகம உண்டு. இந்த உண்மையை உணராமல் நாம் எதிர்மாறான இயல்புகளுடன் வாழ்வதனால் தான் தீராத நோய்களுக்கு உள்ளாகி அல்லற்படுகின்றோம்.

சீனா, ஜப்பான் போன்ற நாடுகளைச் சேர்ந்த மக்கள் நீடித்த ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் அந்நாட்டு மக்களில் புற்றுநோய்போன்ற உயிர்கொல்லி நோய்களின் தாக்கம் மிகக்குறைவாக இருப்பதற்கும் காரணம் அவர்கள் நாளாந்த உணவில் மூலிகை உணவுகளை சேர்த்துக்கொள்வதுதான்.

- இவ்வாறு கூறினார் கேரளத்தைச் சேர்ந்த வைத்தியநிபுணர் திருமதி றத்னா வாசுபால்.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் திருமதி ருக்மணி நடராசா தலைமையில் நடைபெற்ற ரிஷிகாளான் மூலிகை உபஉணவு குறித்த கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மூலிகைகள் இறைவனால் உயிர்களுக்கு வழங்கப்பட்ட பெருங்கொடையாகும். மூலிகைகளை உணவாக உட்கொண்டமையினால் தான் ரிஷிகள் நீண்டகாலம் உயிர்வாழ்ந்தனர். மூலிகை உப உணவுகளை தமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்வதினால் தான் சீன, ஜப்பானிய மக்கள் நீண்ட ஆயுளுடன் சுகதேகிகளாக வாழ்கின்றனர். அங்கு உயிர்கொல்லி நோய்களின் தாக்கமும் குறைவு.

ரிஷி காளான் "கனோத் தெரபி" உள்ள ராஜ மூலிகையாகும். இயற்கையான சூழலில் உருவாகும் இது பண்டைக் காலத்தில் ரிஷிகளுக்கும், அரசர்களுக்கும் மட்டும் உரியதாக இருந்தது. "கனோத் தெரபி", "கனோடெர்மா" சமகாலத்தில் சாதாரண மககளுக்குக் கிடைக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருப்பது பெருங்கொடையாகும்.

தீராத நோய்கள் எமது உடலில் அணுகாமல் செய்வதோடு, வந்த நோய்களை மேலும் விருத்தியடைய விடாமல் மட்டுப்படுத்துகின்ற சிறந்த குணஇயல்பு ரிஷிகாளானில் நிரம்பி உள்ளது இதனை நவீன ஆய்வுகளும் நிரூபித்துள்ளன.

மூலிகை உப உணவுகளினால் எந்தவிதமான பக்கவிளைவுகளும் உடலில் ஏற்படுவது இல்லை. சமகாலத்தில் பிறக்கின்ற குழந்தைகள் பல்வேறு உடற்குறைபாடு உடையவாகளாகப் பிறப்பதற்கு அடிப்படைக் காரணம் பிரசவத் தாய்மார் உட்கொள்ளும் உணவுவகைகள் தாய்மாரின் உடலில் சேருகின்ற நச்சுப் பொருள்கள் வெளியேற்றப்படாமல் கருவில் இருக்கும் குழந்தையின் உடலில் தாக்கத்தை உண்டாக்குகின்றன. இந்த உண்மையை உணர்ந்து தாய்மார் கர்ப்பிணிகளாக இருக்கும் காலத்தில் மூலிகைகளையும் மூலிகை உப உணவுகளையும் நாளாந்த உணவில சேர்த்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைப் பேறின்மையைப் போக்குவதற்கு உரிய சிறப்பியல்புகள் ரிஷிகாளான் உப உணவில் நிரம்பியுள்ளன. இதனை எனது தொழில் அனுபவங்கள் மூலம் கண்டுள்ளேன்.

மரணம் எல்லோருக்கும் உரியது. ஆனால், மரணம் அடையும் வரை உடல் உபாதை இல்லாமல் வாழ்வதற்கான வழிமுறைகளை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

# ஹேமாஸின் 'மாதிரி' மத்திய நிலையங்கள் மாத்தறைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் விஸ்தரிப்பு

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் அண்மையில் மாத்தறையிலும், யாழ்ப்பாணத்திலும் மேலும் இரண்டு 'பியவர' (மாதிரி) நிலையங்களை நிறுவியுள்ளது. இதன்மூலம் கடந்தாண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் திறந்துவைக்கப்பட்டுள்ள 'பியவர' நிலையங்களின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ளன.

'பியவர' ஹேமாஸ் நிறுவனம் சமூக நலன்புரி அமைச்சுடன் இணைந்து மேற்கொண்டு வரும் ஒரு சமூக நலத் திட்டமாகும். ஒன்று முதல் ஐந்து வயது வரையான பராயத்தில் உள்ள பிள்ளைகளின் விளையாட்டுத் தேவைகளையும், உடல் நலத் தேவைகளையும் கருத்திற்கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாதிரி மத்திய நிலையங்களை நிறுவிப் பிள்ளைகளின் சிறுபராயத் தேவைகளை விருத்தி செய்வதும், நாடு முழுவதும் இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்தத் திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

இரண்டு வருட காலத்துள் இத் திட்டத்துக்கு ஐம்பது லட்சம் ரூபாவை வழங்க ஹேமாஸ் உறுதிபூண்டுள்ளது. அரசால் நடத்தப்படும் பத்து முன்பள்ளிப் பாடசாலைகள் இதன்கீழ் தரமுயர்த்தப்படவுள்ளன. கம்பஹா, குருநாகல், மாத்தளை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் இந்தத் திட்டம் ஏற்கனவே வெற்றிகரமாக அமுல்செய்யப்பட்டு வருகின்றது. இந்த மாவட்டங்களில் இவை 'மாதிரி வள' நிலையங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கான 'பியவர' நிலையம் யாழ். மாநகரசபை வளவில் அமைக்கப்பட்டுள்ளது. ஹேமாஸ் குறூப் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹுசேன் யூசுபலி இதனைத் திறந்து வைத்தார். சிறுவர் செயலக உதவிப் பணிப்பாளர் ஜயந்த பீரிஸ், யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் உட்பட பெருந்திரளானோர்கள் இதில் கலந்துகொண்டனர்.

மாத்தறை 'பியவர' நிலையம் தர்மபால மாவத்தையில், மாவட்டத்துக்கான மாதிரி முன்பாடசாலையாகத் திறந்து வைக்கப்பட்டது. ஹேமாஸ குறூப் பணிப்பாளர் இம்தியாஸ் எசுபலியே இதனையும் திறந்துவைத்தார்.

தொழில் வளம்

யாழ்ப்பாணம், மாத்தறை ஆகிய நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம், கற்றல் உபகரணங்கள், மலசலகூட வசதிகள் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை மேம்படுத்தல், பாதுகாப்பான, மகிழ்ச்சியான விளையாட்டு இடங்களைப் பெற்றுக்கொடுத்தல், சீரான சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொள்ளல், ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள், ஊடகங்கள் மூலமான விழிப்புணர்வுத் திட்டங்கள் எனப் பல்வேறு துறைகளில் செலவிடப்படவுள்ளதாக ஹேமாஸ் நிறுவன தொடர்புகொள் முகாமையாளர் ஷிரோமி மசகோரள கூறினார்.

'பியவர' நிலையங்கள் சகல வழிகளிலும் அதி உயர்தரத்தைக் கொண்டவை. சமூக நலன்புரி அமைச்சு கிரமமான முறையில் இதனை மேற்பார்வை செய்துவருகின்றது. நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் பெற்றோர் இந்தத் திட்டத்தில் காட்டிவரும் ஆர்வம் உற்சாகமளிக்கின்றது. தமது பிள்ளைகளைப் 'பியவர' நிலைங்களில் சேர்ப்பதில் அவர்கள் காட்டிவரும் ஆர்வம், இந்தத் திட்டம் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது என்று மசகோரள மேலும் கூறினார்.

இந்தத் திட்டத்தின் வெற்றி காரணமாக, சமூக நலன்புரி அமைச்சுடன் இணைந்து 2004இல் இதனை மேலும் தீவிரமாக அமுல் செய்ய ஹேமாஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக தனது ஊழியர்கள் மத்தியிலும் ஹேமாஸ் இந்தத் திட்டத்தை ஊக்குவித்து வருகின்றது. கம்பனியின் விளையாட்டுக் கழகங்கள் பல முன்பள்ளி பாடசாலைகளைப் பொறுப்பேற்க விரும்பம் தெரிவித்துள்ளன. ஹேமாஸ் சுகாதார சேவை விளையாட்டுக் கழகம், யாழ். 'பியவர' நிலையத்தையும் ஹேமாஸ் போக்குவரத்துப் பிரிவு விளையாட்டுக் கழகம் மாத்தறை நிலையத்தையும் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாயி சிந்தனை



### அன்பை வளர்ப்போம்!

உங்களது தவறை உணர்ந்ததும். தெய்வீகம் தானாக வெளிப்படுகிறது. ஆனால், நாம் நமது தவறுகளைப் புரிந்துகொள்வது இல்லை. அதற்குப் பதில் அடுத்தவரிடம் இருக்கும் தவறுகளைக் கண்டுபிடிக்க மிகமுயற்சி செய்கிறோம். மற்றவர்களது தவறைப் பற்றிக்கவலைப்படாதீர்கள். உங்களது தவறுகளைத் தேடிக்கண்டுபிடித்து அவற்றைப்போக்க முயற்சி செய்யுங்கள். அப்போது தான் உங்களது வாழ்க்கை புனிதமாகும்.

முக்கியமாக நீங்கள் அன்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதில் மனித உயர் குணங்களான சத்தியம், தர்மம், சாந்தி என்பவையெல்லாம் அடங்கியுள்ளன. எது செய்தாலும் அன்புடன் செய்யுங்கள். உங்களது இதயம் ஒரு பெரிய மேல்நிலை நீர்த்தொட்டி. புலன்கள் எல்லாம் தண்ணீக் குழாய்கள். உங்கள் இதயத்தை அன்பினால் நிரப்புங்கள். பிறகு தான் புலன்கள் மூலம், அன்பினை அனுபவிக்க முடியும்.

மற்றவர்களுக்கு அறிவுரை கூறுமுன் முதலில் உங்கள் நடைமுறைக்கு அதனைக் கொண்டு வாருங்கள். வேதங்களையும், புராணங்களையும் படித்து என்ன பயன்? அவற்றை உங்கள் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டாமா? மருந்துகளின் பெயரை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்வதால் உங்கள் நோய் தீருமா, நாவில் சுவை சேர்க்கும் தின்பண்டங்களைப்பற்றி இடைவிடாது பேசுவதன் மூலம் பசியடங்கிப் போகுமா? அதைப்போல, இறைவன் பெயரை இடைவிடாமல் சொல்லுதல் என்பது போதாது. அவர் கூறியபடி, நற்செயல்களில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## மனைப் பொருளியல் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஜன.29

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் சமூக மேம்பாட்டு மையத்தினால் சாவகச்சேரியில் மனைப் பொருளியல் பயிற்சி வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி சாவகச்சேரி, கச்சாய் வீதியில் உள்ள கட்டடமொன்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ம-10-117)

## சாராயம் விற்றவர் கைது

இளவாலை,ஜன.29

அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்பனை செய்த ஒருவர் இளவாலைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இளவாலை, சென்.ஜூட் வீதியில் உள்ள தவறணையொன்றில் இருந்த 35 போத்தல் சாராயம் தொடர்பாக விசாரணை செய்த போதே அனுமதிப் பத்திரம் இல்லாமை தெரியவந்தது. மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார்.

(ம-10-48)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்வி நிலையத்தில் கல்வி பயிலும்
**செல்வன் ஜெயக்குமார் ஜெசிந்**
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
125 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்காக
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சுருவில் வீதி,
புளியங்கூடல், வேலணை.

நிர்வாகி,
எதிரொலி கல்வி நிலையம்.

**BOND** நிறுவனத்தால் நடத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன. (27765)(35-26-11-19)


## கும்பாபிஷேகம்

கொக்கு இருந்தபதி ஸ்ரீகண்ணகை அம்பாள் என அழைக்கப்படும் அச்செழு அருள்மிகு சிவகாமி அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா நவ குண்டபட்ச மகாயாக மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 4ஆம் திகதி புதன் கிழமை காலை 7.18 மணிக்கும் 8.51மணிக்கும் இடையில் நடைபெற உள்ளது.

இக்கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெறும். பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவர்.

புன்னாலைக்கட்டுவன் சிவஸ்ரீ சிதம்பர.கிருஷ்ணசாமிக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நிகழ்த்துவார்.கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45தினங்கள் மண்டல மஞ்சன அபிஷேகம் இடம்பெறும். (ம-152)

## 'வெளிச்சம்' வெளிவந்தது

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின் 84ஆவது இதழ் தற்பொழுது வெளிவந்துள்ளது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் தினஉரையின் ஒரு பகுதியும் மாலிகா, சித்தாந்தன், தீபாகுமரேஷ், மீரா பாலகணேசன், சு.வில்வரத்தினம், தானா விஷ்ணு, முல்லைக்கமல் ஆகியோரின் கவிதைகளும் - இடம்பெற்றுள்ளன.பலரது கட்டுரைகளும் சிங்கள - தமிழ் கலைக் கூடல் பற்றிய அனுபவப் பகிர்வுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. (ம-10)


## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

2003ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலையின் புதல்வர்கள்

ந.சிந்துஜா -141 க.துஷ்யந்தி -133
இ.அன்பரசன் -139 பா.கிருத்திகா -128

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் எமது பாடசாலையிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய 7பேரில் 4பேரை சித்தியடையச் செய்த 57% மாணவரின் சித்திக்கு காரணமாயிருந்த வகுப்பாசிரியை திருமதி தே.நவரட்ணம் உள்ளிட்ட ஆசிரியர் குழாத்தையும் அனுசரணையாக இருந்த அதிபர் செல்வி பா.கந்தசாமி அவர்களையும் பிரபல்யமில்லாத எங்களுக்கான எங்கள் பாடசாலையூடாகவும் வெற்றி பெறலாம் என்று நம்பி தங்கள் பிள்ளைகளை அனுப்பிவைத்த அனைத்துப் பெற்றோரையும் நன்றியுடன் வாழ்த்துகிறோம்.

(27770) (35-26-11-19) - பெற்றோர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சந்திரபுரம், மட்டுவில் வடக்கு செல்லப்பிள்ளையார் கோவில்



திருப்பணிச்சபை செயலாளரும்
சனசமூக நிலைய முன்னாள்
செயலாளரும் மட்டுவில் இந்து
இளைஞர் மன்ற முன்னாள் தலைவரும்
சிறந்த சமூக சேவையாளருமாகிய
**உயர்திரு.வல்லிபுரம் மகாலிங்கம்**
அவர்கள் சாவகச்சேரி மாவட்ட
நீதிமன்றில் நீதிபதி
பா. சுப்பிரமணியம் முன்னிலையில்
அகில இலங்கை சமாதான
நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரது சமூக சேவை மேலும் சிறப்படைய பாராட்டி வாழ்த்துகிறோம்.

சாவகச்சேரி.
(C/32984) (35-26-11-19) மட்டுவில் இந்து இளைஞர் மன்றம்.

## கண்ணீர் அஞ்சலி

நுணாவில்குளம் கண்ணகை அம்பாள்
ஆலய பிரதம குருக்கள்
**சிவஸ்ரீ சபாபதிஐயர்**
**சிவகடாட்சக்குருக்கள்**

26.01.2004 அன்று காலமாகியதையிட்டு நாம் மிகுந்த துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நுணாவில்குளம் கண்ணகை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி,
(27762) (26-11-19)

அம்பாள் சனசமூக நிலையம்,
அம்பாள் விளையாட்டுக் கழகம்,
மட்டுவில் – நுணாவில்.

## தேவை

பனம்தும்பு உற்பத்தி செய்வதற்குத் தரமான கங்குமட்டை தேவை. விநியோகஸ்தர்கள் கீழ் வரும் முகவரியுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

The Manager,
Euroville Investments (Pvt) Ltd.
17, Chemmaney Road,
(next to Agrarian Services Center), Nallur, Jaffna.
(C/32985) (34-26-11-19)

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் - முல்லைத்தீவு

வழ.இல: 398/03
தன்மை: மணநீக்கம்

பிரகாஸ் சத்தியபாமா,
7 ஆம் வட்டாரம், ராணி தோட்டம்,
புதுக்குடியிருப்பு.
- வழக்காளி

- எதிர்

அன்னலிங்கம் பிரகாஸ்
இல: 515, யோகபுரம் வள.நகர்,
மல்லாவி.
நி/மு: ஓடைக்கரை
கல்லூரி வீதி, பருத்தித்துறை.
- எதிராளி

### இடைக்காலத் தீர்வை

மேற்படி வழக்கானது முல்லைத்தீவு மாவட்ட நீதியாளர் திரு. சி.மணியரசன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவர் தரப்பில் சட்டவாளர் பரஞ்சோதி அவர்களும் தெரிபட்டு இருக்க எதிராளி இவ்விடம் இல்லாததால் பத்திரிகை விளம்பரம் 16.11.2003 இல் உதயன் பத்திரிகை மூலம் அறிவித்தல் செய்திருந்தும் எதிராளியோ அவரைச் சார்ந்தவர்களோ சமுகமளிக்கவோ ஆட்சேபனை எதுவும் தெரிவித்தோ இருக்காததால் 2003.12.24 ஆம் திகதியன்று ஒருமுக விளக்கம் இடம்பெற்று பின்வருமாறு இதற்கான இடைக்காலத் தீர்வை வழங்கப்பட்டது.

இதன் பிரகாரம் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1998.06.22 ஆம் திகதியன்று இடம்பெற்ற திருமணப்பதிவு இரத்துச் செய்யப்பட்டு விவாகரத்து வழங்கப்படுவதுடன் வழக்காளி திருமணத்திற்கு முன்பிருந்த நிலையை அடைவதாகவும் கன்னிப் பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் பயன்படுத்தலாமெனவும் வெளிப்படுத்தி இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டதன்படி தீர்வை அணைக்கப்படுகின்றது.

மேலும் இத்தீர்வை வெளியிடப்பட்டு 21 நாள்களுள் எதிராளியோ அவரைச் சார்ந்தோரோ ஆட்சேபனை தெரிவிக்காவிடில் அந்நாள்கள் முடிந்ததும் முற்றான தீர்வையாக்கப்படும் என வெளிப்படுத்தப்படுகிறது.

வரைவு: சட்டத்தரணி
திரு.த.பரஞ்சோதி
மாவட்ட மன்று
முல்லைத்தீவு. (27768)(34-26-11-19)

நீதிமன்றின் கட்டளைப்படி பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
முல்லைத்தீவு.

## மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளது!

"திருமதி அடேல் பாலசிங்கம்" எழுதிய
"சுதந்திர வேட்கை"

இந்நூலின் பிரதிகளுக்கு ஏற்பட்ட
தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு,
வாசகர்களின் தேவையைப் பூர்த்தி
செய்யும் நோக்கில்,
புதிய பிரதிகள் தருவிக்கப்பட்டுள்ளன.

~ வாசகர்களுக்கு மற்றுமொரு இனிப்பான செய்தி.~

புதிதாகத் தருவிக்கப்பட்ட
"சுதந்திர வேட்கை" பிரதியொன்றின் விலை
ரூபா 350/= மட்டுமே

புத்தக விற்பனையாளர்களுக்கு
நியாயமான கழிவு வழங்கப்படும்.
வாசகர்கள் புத்தக விற்பனை நிலையங்களிலும்
கீழ்க்காணும் விலாசத்திலும் பிரதிகளை
நேரடியாகக்கொள்வனவு செய்யலாம்.

விளம்பரப் பிரிவு
உதயன் பத்திரிகை நிறுவனம்,
இலக்கம் - 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/32983)

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் ஆராதனையும்

தோற்றம்
09 - 04 - 1942



மறைவு
16 - 12 - 2003

அமரர்
**வல்லிபுரம் வேலுப்பிள்ளை**

அன்பின் ஊற்றே - பண்பின் பிறப்பிடமே!
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! - பாசத்தின் உறைவிடமே!
எம் நல் வாழ்வுக்கு வழிகாட்டிய - அன்புத் தெய்வமே!
இனிய தந்தையே! மாறுமா தங்கள் நினைவலைகள்?

இன்று (29.01.2004) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் ஆராதனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பூவற்கரை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை. (27763)(34-26-11-19)
- குடும்பத்தினர்.

# பொதுத் தேர்தலை நடத்துவதால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை

நாடு சிக்கலான ஒரு நிலையை எதிர்நோக்கியுள்ளபோது, ஸ்ரீல.சு.கட்சியும் ஜே.வி.பியும் கூட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தால் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியுமா? ஒப்பந்தத்தின் விளைவாகப் பொதுத்தேர்தல் ஒன்று வந்தால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? இவை பற்றியெல்லாம் ஆராய்ந்து, இனி நடக்கப்போவது என்ன என்று எழுதுகின்றார் கொழும்புப் பல்கலைக்கழக அரசியல்துறைப் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட. 'லங்கா தீப' பத்திரிகையில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கம் இது.

நாட்டு அரசியல் அரங்கில் நிச்சயமற்றதும், குழப்பமானதுமான சூழ்நிலை நிலவும் இவ்வேளையில் ஸ்ரீல.சு.கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இன்றைய நிலையைத் தீர்ப்பதற்கு இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்குமா என்பது சந்தேகத்துக்கு இடமானதே.

ஸ்ரீல.சு.கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களில் நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சிக்கல்களை எந்தவிதத்திலும் தீர்த்துக் கொள்ளக்கூடிய வழிவகைகள் காணப்படவில்லை.

சமாதானப் பேச்சுகள், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பனவே இக்கூட்டு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாகும். இப்பிரச்சினைகள் தொடர்பாக இக்கூட்டு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் யாவும் காலம் கடந்துவிட்ட ஆலோசனைகளாகும்.

நாட்டின் தற்போதைய சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பதற்கோ அல்லது எதிர்கால அபிவிருத்திக்குப் பயனளிக்கும் வகையிலோ அந்த ஆலோசனைகள் அமைந்திருக்கவில்லை.

உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளால் நாட்டின் இனப்பிரச்சினை மற்றும் சமாதானப் பேச்சுகள் தொடர்பான விடயங்களில் இப்போதுள்ள நிலையிலிருந்து சிறிதும் முன்னோக்கிச் செல்ல இயலாது. உண்மையில் அந்த நிலைமையிலிருந்து மேலும் பின்னடைவையே சந்திக்க நேரிடும்.

இக்கூட்டணியால் ஒருவேளை, அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தாலும் அது பெரும் சவாலுக்கு முகங்கொடுக்கவேண்டி நேரிடும். இவ்விரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள நலிவான கருத்துக்களை அரசின் கொள்கைகளாகப் பிரகடனப்படுத்துவதா? அல்லது அவற்றைக் கைவிட்டுவிட்டுத் தாம் உருவாக்கும் அரசுக்காகப் புதிய கொள்கைத் திட்டங்களை வகுத்துக்கொள்வதா? என்பதே இக்கூட்டணி எதிர்நோக்க நேரிடும் சவாலாக அமையும். இவ்விடயம் தொடர்பாக இக்கூட்டணியின் தலைவர்கள் மிகக் கருத்து வேறுபாடுகளைக் கொண்ட பேச்சுகளை மேற்கொள்ள நேரிடும்.

உடனடியாகப் பொதுத்தேர்தலொன்றை எதிர்கொள்வதற்கே அவசரமாக இவ்வாறான கூட்டு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான முக்கிய நோக்கமெனக் கருத முடிகிறது. முக்கியமாக ஜே.வி.பியினதும், ஸ்ரீல.சு.கட்சியைச் சேர்ந்த சில பிரமுகர்களதும் முக்கிய குறிக்கோள் முடிந்தவரையில் விரைவாக

## வீயெஸ்ரீ

அரச நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் விதத்தில் செயலில் இறங்குவதாகும்.


இவ்விரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட இக்கூட்டு உடன்படிக்கை அரச நிர்வாகத்தைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புக்கான ஆரம்ப நடவடிக்கை. அதன்மூலம் தமது கூட்டுக்கு இலாபகரமான வகையில் நாட்டின் அரசியல் அதிகாரக் கட்டமைப்பில்மாற்றம் ஏற்படுத்துவதை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இக்கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், உருவாகும் அரசியல் அதிகாரக் கட்டமைப்பு மாற்றத்தின் மூலம் திடீர் பொதுத் தேர்தலொன்றை நடத்தமுடியுமென அவர்கள் நம்புவதாகத் தோன்றுகிறது.

### பொதுத் தேர்தல்

ஆனால், நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலொன்றை நடத்துவதற்காக தற்போதைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதியே கலைத்தாகவேண்டும். அவ்விதம் அவசர பொதுத்தேர்தலொன்று நடத்தப்படவேண்டுமா? என்பது குறித்துத் தற்போதுகூட ஜனாதிபதி திடமாகத் தீர்மானிக்க முடியாதநிலையில் இருக்கின்றார். ஆயினும், நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலொன்றுக்கு உத்தரவிடுமாறு கோரி ஜனாதிபதிக்குப் பலதரப்புக்களிலிருந்தும் வற்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுமென்பதில் சந்தேமில்லை.

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலொன்றுக்கு உத்தரவிடுவதன் மூலம் தன் எதிர்பார்ப்புகளுக்கு நன்மைகள் கிட்டுமா என்பது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து பார்த்ததன் பின்னரே ஜனாதிபதி அது குறித்துத் தீர்மானம் மேற்கொள்வாரெனத் தோன்றுகிறது.

இக்கூட்டு உடன்படிக்கை மூலம் அரசியல் அதிகாரக் கட்டமைப்பில் திடமான மாற்றம் ஏற்பட்டுள்ளதா? அவ்விதம் ஏற்பட்டிருப்பின், அம்மாற்றம் ஜனாதிபதிக்கு இலாபகரமானதாக அமைகின்றதா என்பது குறித்து ஜனாதிபதி விரிவான வகையில் ஆராயக்கூடும். ஆனால், இக்கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் பரந்த அரசியல் எழுச்சி எதுவும் உருவாகியுள்ளதாக இதுவரையில் காணமுடியவில்லை.




பொதுத்தேர்தலொன்றில் இறங்குவதைவிட, ஜனாதிபதி வேறொருவகை அணுகுமுறையைக் கைக்கொள்ளவும் வழியுண்டு. தற்போது திட்டமிடப்பட்டுள்ளது போன்று ஐ.தே.கட்சியுடன் இணைந்து செயற்பட்டு, மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தி, அம்மாகாணசபைத் தேர்தல்கள் அனைத்தையும் குறிப்பிட்டதொரு நாளிலேயே நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதே அவ் அணுகுமுறையாகும்.

பொதுத் தேர்தலொன்றில் இறங்குவதற்குப் பதிலாக அதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவதன் மூலமும் தமது அரசியல் அதிகாரக் கட்டமைப்புக் குறித்து அளவீடு செய்து கொள்ளமுடியும்.

ஆட்சி அதிகாரத்திலுள்ள அரசுத் தலைவரொருவர் பொதுத் தேர்தலொன்றை நடத்துவதெனத் தீர்மானிப்பதற்கு முன்னர் அவ்வித முடிவின் மூலம் சமூகத்தில் நிலவும் அரசியல் அதிகாரக் கட்டமைப்புத் தமக்குச் சாதகமான பலனை அளிப்பதற்கான வாய்ப்பு உள்ளதா? என்பது குறித்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆழமாகச் சிந்தித்தே அவ்வித தீர்மானத்தை மேற்கொள்வதுண்டு. ஆனால், இன்றைய நிலையில் நம் .நாட்டின் அதிகாரக் கட்டமைப்புத் தெளிவாக இல்லாமையால் பொதுத்தேர்தலொன்றில் இறங்குவது குறித்து மிகக் கவனமாக ஆராய்ந்தே தீர்மானிக்க வேண்டியுள்ளது.

அந்தவகையில், மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, அதன்மூலம் அதிகாரக் கட்டமைப்புக் குறித்துப் பரிசீலித்துக் கொள்வதே இதற்கான சிறந்த மாற்றுவழியாகும்.

பொதுத்தேர்தலொன்று நடத்தப்படுவதைப் பலர் விரும்புகின்ற போதிலும், ஜனாதிபதி அது குறித்துப் பெரியளவில் ஈடுபாடு காட்டுவதாகத் தோன்றவில்லை. ஜனாதிபதி தமது மூலோபாய அபிலாஷைகள் குறித்துக் கணக்கிட்டுத் தன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தோன்றுகின்றது.

ஏதாவது சில அழுத்தங்கள் காரணமாகப் பொதுத்தேர்தலொன்றை நடத்த வேண்டிய நிலைமை உருவாகுமானால் தற்போதைய அரசியல் அதிகாரக் கட்டமைப்பில் குறிப்பிடக்கூடிய அளவில் மாற்றமெதுவும் ஏற்படுமென நம்பமுடியாது. இக்கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிகழ்ச்சியையும் அப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களையும் அவதானிக்கும்போது, அடிப்படைச் சிங்கள இனவாதக் கருத்து வெளிப்பாடுகள் மூலமும் சிங்கள இனவாதச் சமிக்ஞைகள் மூலமும் சகல முயற்சிகளும் திசை திருப்பப்பட்டுள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

### சிறுபான்மையினர் ஆதரவு

சிறுபான்மை இன மற்றும் மதத்தவர்கள் இப்புதிய கூட்டுக்கு எந்த அளவுக்கு ஆதரவளிப்பர் என்பது கேள்விக்குரியதொன்றாகும். இச்சிறுபான்மை இன மற்றும் மதத்தவர்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்ப்பதில் இக்கூட்டில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினராலும் வெற்றிகாண இயலாது. ஆகவே, இக்கூட்டணி தேர்தலில் பங்கேற்கும் வேளையில் இச்சிறுபான்மை இன மற்றும் மதத்தவர்களின் வாக்குகள் அவர்களுக்குக் கிடைக்குமென்பது சந்தேகத்துக்கு இடமானதொன்றே.

அந்தவகையில், இக்கூட்டணி பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தேர்தலில் வெற்றியீட்டும் நோக்குடனேயே தமது தேர்தல் உத்திகளை வகுத்து வருகின்றது. ஆனால், அவ்விதம் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகளால் மட்டும் தேர்தலில் அமோக வெற்றியீட்டி அரசமைக்க முடியுமென்பதும் தவறான எதிர்பார்ப்பாகும்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜே.வி.பியினரின் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை தற்போதுள்ளதைவிட அதிகரிக்கக்கூடும். பொ.ஐ.முன்னணியும் தற்போதுள்ள தமது நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை ஏறக்குறைய அதே அளவில் தக்கவைத்துக் கொள்ள இடமுண்டு. அந்தவகையில் நோக்குமிடத்து, பொதுத்தேர்தலொன்றை இந்தச் சமயத்தில் எதிர்கொள்வது ஜே.வி.பியினரைப் பொறுத்தவரையில் இலாபகரமானதொன்றாக அமையக்கூடும்.

ஏதாவதொரு விதத்தில் பொதுத் தேர்தலில் இக்கூட்டணியால் தமது நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய முடிந்தாலும், அரசமைப்பதற்கான பெரும்பான்மையைப் பெறுவதற்காக ஏனைய சிறு அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டிய நிலை ஏற்படும். எனவே, இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலின் பின்னர் ஒன்றில் குறைவானதொரு பெரும்பான்மைப் பலம்கொண்ட உறுதியற்ற ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீல.சு.கட்சிக் கூட்டணியின் அரசோ அல்லது மிகக்குறைந்த அளவான பெரும்பான்மைப் பலத்துடன் நிறுவப்படும் ஸ்திரமற்ற ஐ.தே.முன்னணி அரசோதான் அரசமைக்கும் நிலை உருவாக இடமுண்டு. அத்தகையதொரு, நிலையில் இவ்விரு அரசுகளாலும், தற்போதைய அரசியல் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வும் காணமுடியாத நிலை உருவாகும்.

ஆகவே, தற்போதுள்ள சிக்கல்கள் நிறைந்த, நிச்சயமற்ற அரசியல் நிலைக்குப் பொதுத் தேர்தலொன்றை நடத்துவதால் மட்டும் தீர்வுகண்டு விடமுடியாது.

பொதுத் தேர்தலின் மூலம் ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீல.சு.கட்சிக் கூட்டணியால் அரசமைக்க முடிந்தாலும், அதன்பின்னர் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளவேண்டி ஏற்படும். அந்த வேளையில், ஜே.வி.பியினரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஸ்ரீல.சு.கட்சி சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டி அல்லது ஜே.வி.பியினர் தாம் இதுவரை மேற்கொண்டு வந்த தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டி ஏற்படும்.

### சமாதான முயற்சிகள்

மற்றொரு வகையில் இன்றைய நிலையைவிட, மேலும் நலிவடைந்த நிலையிலேயே இக்கூட்டு முன்னணி சமாதான நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டி நேரிடும்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் நம்பிக்கையை ஈட்டிக் கொள்வதற்காக் இக்கூட்டணி புதிதாக நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியேற்படும் ஆனால், ஐ.தே. முன்னணிக்கோ இவ் விடயத்தில் அந்த அளவுக்கு கடும் சவாலை எதிர்நோக்க நேரிடாது. அத்தகையதொரு, சந்தர்ப்பத்தில் அவர்கள் பழைய சமாதான நடவடிக்கைகளை விட்ட இடத்திலிருந்து புதுப்பித்துக் கொள்ளவேண்டி மட்டுமே ஏற்படும்.


அந்தவகையில், ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீல.சு.கட்சி கூட்டணி விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதானால், நலிவுற்ற மற்றும் இலாபகரமற்றதொரு நிலையிலேயே பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டிநேரிடும். அதேவேளை, இவ்விதம் ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீல.சு.கட்சி கூட்டணியுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வேளையில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு குறிப்பிடத்தக்க பலமான நிலை கிட்டும்.

ஐ.தே.முன்னணி அரசமைத்தால் அவ்வித சவால்கள் எதனையும் சந்திக்கவேண்டி ஏற்படாது. எனினும், வேறுவித பிரச்சினைகளுக்கு அது முகம்கொடுக்க வேண்டி இருக்கும். இன்று நமது நாட்டின் சமாதானப் பேச்சுகள் முக்கியமான கட்டமொன்றினை அண்மித்துள்ளன. அதில் முதலாவது கட்டம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. ஆகவே, நாம் அடுத்த கட்டத்தில் பிரவேசிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

### கையாலாகாத அரசுகள்

இச்சமாதான நடவடிக்கைகளைப் புதியதொரு கட்டத்துக்கு எடுத்துச் செல்லக் கூடிய தன்மையைப் பிரதமரிடம் காணமுடியவில்லை. அவ்வித திறமையும், பிரதமரிடம் கிடையாது. அதேவேளை, ஜனாதிபதியிடம்கூட அத்தகைய திறமை காணப்படவில்லை. இதனை ஜே.வி.பி. - ஸ்ரீல.சு.கட்சி கூட்டு தெளிவாகப் புலப்படுத்துகிறது. அதற்கான தூரநோக்கு அவர்களிடம் கிடையாது.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பது மட்டுமன்றி பொருளாதாரத் துறையிலும் நாட்டை முன்னேற்ற வேண்டிய பொறுப்பை இப்புதிய கட்டத்துடன் இணைத்துக்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். அதற்காகத் தேவைப்படும் திறமை கூட ஐ.தே. முன்னணியிடமோ அல்லது பொ.ஐ. முன்னணியிடமோ காணப்படவில்லை. அதுமட்டுமல்லாது ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீல.சு.கட்சிக் கிடையேயான புதிய கூட்டணியிடம் கூட அவ்வித திறமையைக் காண முடியவில்லை.



கொழும்பு பல்கலைக்கழக
அரசியல்துறைப் பேராசிரியர்
**ஜயதேவ உயன்கொட**

இத்தகைய நிலையில் நீண்டதொரு நெருக்கடியை நோக்கி நாடு பயணிப்பதாகவே எம்மால் கருத முடிகிறது. பிரச்சினைகளுக்குத் தீர்வேதுமின்றி காலம்பூராகவும் அலைய வேண்டி நேரக்கூடும்.

இத்தகைய நிலைமைக்கு புதிய இக்கூட்டணிமூலம் எவ்வித தீர்வையும் எதிர்பார்க்க இயலாது. பொருளாதாரம், அதிகாரப் பகிர்வு மற்றும் சமாதானப் பேச்சுகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக இப்புதிய கூட்டணியின் கொள்கைகள் மிகப் பிற்போக்கான வகையில் அமைந்தவையாகும். அவ்வித பிற்போக்கான கொள்கைகளால் நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்த இயலாது.

நாட்டின் தற்போதைய அரசியல் சவால்களெவற்றுக்கும் தாம் பொறுபபானவர்கள் அல்லர் என்ற விதக் கருத்து வெளிப்பாட்டைத் தமது இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இப்புதிய கூட்டணி வெளிப்படுத்தியுள்ளது.

### புலிகளின் முடிவு

மற்றொரு புறத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று எட்டப்படாவிட்டால், விடுதலைப் புலிகள் அமைப்பு ஒருதலைப்பட்சமாக முடிவு மேற்கொள்ளத்தக்க அரசியல் இறுக்கமொன்றை நோக்கித் தென்பகுதி அரசியற் தரப்புக்கள் பயணிப்பதாகவே கருதமுடிகிறது. தென்பகுதி அரசியலின் இறுக்கத் தன்மையினூடாக விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு தலைப்பட்சமான முடிவுகளைத் தேடக்கூடுமென நம்பமுடியும்.

ஆயினும், தனிநாடொன்றுக்கான அவசரமுடிவை அவர்கள் மேற்கொள்ளக்கூடுமென இப்போது எண்ணமுடியாது. ஆசிய வட்டகையிலும் உலகம் பூராவிலும் தற்போது நிலவும் அரசியல் நிலைமைகளுக்கமைய தனிநாட்டுக் கோரிக்கை இவ்வேளையில் பொருத்தமற்றதென்பதை அவர்கள் உணர்ந்துகொண்டுள்ளனர். ஆதலால், இன்றைய நிலையில் அவ்வித தனிநாட்டுக்கோரிக்கை விடுதலைப் புலிகளால் எழுப்பப்படக் கூடுமென எதிர்பார்க்கமுடியாது.

அதற்குப் பதிலாக ஸ்ரீலங்கா அரசுக்கு இணையாக இயங்கும் வகையில் தமது இராணுவ பலம், நிர்வாக நடைமுறை மற்றும் பொருளாதார வலு என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு விடுதலைப் புலிகள் முயலக்கூடும்.

நமது நாட்டில் இன்று நிலவும் சிக்கல் அரசியல் தலைமைத்துவம் தொடர்பானதே. இந்த நாட்டை நிர்வகிக்கும் திறமையோ அல்லது நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறமையோ பொ.ஐ. முன்னணிக்கு மட்டுமன்றி ஐ.தே. முன்னணிக்கும் கிடையாது என்பது தெளிவாகத் தோன்றுகிறது. கடந்த காலங்களில் மாறிமாறித் தலைமைத்துவம் வகித்தவர்களது நடவடிகளைகள் இதனை உறுதிசெய்துள்ளன. அதேவேளை, மீண்டும் பொதுத்தேர்த

(14ஆம் பக்கம் பார்க்க)

### மத்திய கல்லூரி மெய்வன்மை போட்டிகளில்

# பாடசாலை மட்டத்தில் நீச்சல் போட்டி அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஜன.29

பாடசாலையில் இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டியில், நீச்சல் மற்றும் படகு ஓட்டப் போட்டிகள் யாழ்.மாவட்டத்தில் முதன முறையாக யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இப்பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான நீச்சல் மற்றும் படகு ஓட்டப்போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை செட்டிபுலம் (சாட்டி) கடலில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் கல்லூரியின் ஐந்து இல்லங்களையும் சேர்ந்த 65 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். என அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார். (ம-9)

## தவறிவிட்டது

கந்தசாமி செல்வராணி என்பவரின் தே.அ. அட்டை (718072964V), வி.அ. (0902022638), கிளனிக்காட் என்பன 24.1.2004 அன்று யாழ்பபாணத்திற்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மாயவன் கொமினிக்கேசன், இராமநாதன் வீதி (பல்கலைக்கழகம் முன்பாக), யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.

(27780)

# அனுமதி பெற்று கட்டடங்களை அமைக்கக் கோருகிறது பிரதேச சபை

யாழ்ப்பாணம்,ஜன.29

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி பொதுமக்கள் கட்டடங்களை கட்ட வேண்டாம் என்று நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.இராசதுரை பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் வீடுகள், கடைகள் என்பன அனுமதியின்றிக் கட்டப்படுகின்றனர். இதன் காரணமாக அந்தக் கட்டடங்களை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதேச சபையின் நிபந்தனைக்கு முரணான வகையில் கட்டப்படும் கட்டடங்கள் யாவற்றையும் அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை சபை மேற்கொண்டுவருகின்றது.

அனுமதியின்றி கட்டப்பட்ட சில கட்டடங்களை அகற்றுவதற்கு ஏற்கனவே நீதிமன்றில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் பிரதேச சபையின் அனுமதியுடனேயே கட்டடங்களைக் கட்டுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (ம-7)

## நூல் வெளியீடு

வலி.வடக்கு,ஜன.29

'கந்தபுராண கவிமலர்கள்' என்னும நூல் வெளியீட்டு நிகழ்வு மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் எதிர்வரும 5 ஆம் திகதி தைப்பூசத்திருநாளில் இடம்பெறவுள்ளது.

ஆலய மண்டபத்தில் நண்பகல் இடம்பெறும் நிகழ்வுகளைத்தொடர்ந்து இந்த நூலை மாவையாதீனகர்த்தா பிரதமகுரு மஹாராஜ ஸ்ரீ.சு.து.சண்முகநாதக்குருக்கள் வெளியிட்டு வைக்கவுள்ளார். (ம-16)

## கலந்துரையாடல்

**யாழ்.புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்**

**புலமைப்பரிசில் பரீட்சை-2003**

மேற்படி 2003ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள் எதிர்வரும் சனிக்கிழமை 31.01.2004 பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கலந்துரையாட சமுகமளிக்கும்படி தயவுடன்வேண்டுகிறேன்.

பெற்றோர் சார்பாக
க.இரகுவரேந்திரன்

(32992)(12-17-32)

## பொதுத் தேர்தலை.....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

லொன்றை நடத்துவதால் கூட இப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டப்போவதில்லை.

இன்று நாட்டில் உருவாகியுள்ள இவ்வரசியல் சிக்கல்களுக்கு ஏதாவதொரு விதத்தில் தீர்வு காணப்பட வேண்டுமாயின் நாட்டின் நிர்வாக மட்டத்தில் ஒன்றிணைப்பு உருவாக்கப்படுதல் அவசியமாகிறது. தம்மிடையே பிரிந்து நின்று செயற்படும் இந்த நிர்வாக மட்டங்கள் எமது நாட்டின் எதிர்காலத்தை அடுத்த கட்டத்துக்கு இட்டுச்செல்வதற்கான திறமையைக் கொண்டிருக்கவில்லை. ஆதலால் ஒன்றிணைந்து செயற்படத்தக்க பல்வேறு நிர்வாக மட்டங்கள் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வருவதன் மூலமே இக்குறிக்கோளை எய்தக்கூடியதாயிருக்கும்.

ஆகவே, அரசியல் ரீதியில் ஒன்றிணைந்து செயற்பட முன்வரும் நிர்வாக மட்டமும், தூர நோக்குடன் நாட்டின் எதிர்கால சுபீட்சம் கருதி தைரியத்துடன் செயற்படத்தக்க தலைமைத்துவமும் உருவாக வேண்டியது இன்று நாம் நம் நாட்டில் நிலவும் சிக்கல்களிலிருந்து விடுபட்டுக் கரையேறுவதற்கான அவசிய தேவைகளாகும். (ம)

# மரண அறிவித்தல்கள்

## வேலன் வல்லிபுரம் (பிரபு) (பிரபல மேசன்)

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் வல்லிபுரம் அவர்கள் 28.01.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லிபுரம் நல்லமுத்துவின் அன்புக் கணவரும் சறோசாதேவி, கனகரத்தினம், குணரட்ணம் (டோகா), சத்தியவதனி, ஜீவரட்ணம் (டோகா), துரைட்ணம் (லண்டன்), உதயகுமார் (டோகா), சதிஸ்வரன், கமலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, ஜெனிதா சந்திரகாந்தன், தயாராஜினி, தவமலர், சி.குணநேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுமன், சுபாஜினி, சுதர்சினி, சுகந்தினி, டிசுந்தன், ஜீவரூபன், சுகன்ஜா - ஜீனுஷன, விலாஜினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பெரியவிளான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

*பெரியவிளான்,*
*இளவாலை.* (27778)(12-17-32)

தகவல்:
வ.சதிஸ்வரன்
(சதியன் - மகன்).

## கார்த்திகேசு பூபாலசிங்கம்

இணுவில் கிழக்கைச்சேர்ந்த கார்த்திகேசு பூபாலசிங்கம் அவர்கள் நேற்று (28.01.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு தம்பதிகளின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அருமைக் கணவரும் நாகேஸ்வரி (பிரான்ஸ்), நந்தகுமார் (சுவிஸ்), ஜெயதீஸ (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஆறுமுகதாஸ் (காந்தி), பாஸ்கரன், நிர்மலா ஆகியோரின் அருமை மாமனாரும் மகாலிங்கம், காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரணவன், பரத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2004) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (27783)(36-12-17-32)

தகவல்:
நந்தகுமார்
(குமார்-மகன்).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

### கனகரெத்தினம் சின்னத்தம்பி

*அவர்கள் 2004. 01. 21 இல் மாவட்ட நீதிபதி எல். எல்.அப்துல் மானவ அவர்கள் முன்னிலையில் இலங்கை முழுமைக்குமான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையை அறிந்து மாணவர்களாகிய நாம் பெருமையடைகின்றோம். நான்கு தசாப்தங்களுக்கு மேலாகப் பொதுத் தொண்டாற்றி வரும் இவர், திருக்கோவிலில் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகவும், 'உதயசூரியன்' விளையாட்டுக்கழகத் தலைவராகவும், மெதடிஸ்த திருச்சபைச் செயலராகவும், சேகரக் காலாண்டுக் கூட்டச் செயலராகவும், பொதுநிறுவனங்கள் பலவற்றில் நிருவாகசபை உறுப்பினராகவும் பொத்துவில் கல்வி வட்டார ஆசிரிய சங்கச் செயலராகவும் பல வருடங்கள் பணிபுரிந்தவர். தற் போது பண்டத்தரிப்பில் வை. எம். சி. ஏ. தலைவராகவும், ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவராகவும், தென் இந்திய திருச்சபைச் செயலராகவும் சேவைசெய்து வருகிறார். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்கச் செயலராகவும், நுகர்வோர் பாதுகாப்பு மன்றச் செயலராகவும், ஹரியட் வின்சிலோ மகளிர் இல்ல முகாமையாளராகவும் ஆண்டுகள் பல தொண்டாற்றியுள்ளார். அனைத்துக்கும் மேலாக ஆங்கில ஆசிரியராகத் தொடங்கிய இவரது ஆசிரியப் பணி வடக்கு, கிழக்கு மலைநாடு ஆகிய பிரதேசங்களில் யாழ்ப்பாணக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி போன்றவற்றிலும் பிரபல்யம் மிக்க தனியார் கல்வி நிறுவனங்களிலும் 44 வருடங்கள் தமிழ்ப்பேராசானாக மலர்வுற்றமை போற்றற்குரிய ஒன்றாகும். மும்மொழியும் அறிந்த இவரது நியமனம் காலங்கடந்தது எனினும் சாலப் பொருத்தமானது என்பதையுணர்ந்து பாராட்டிச் சமூகசேவை தொடரவும் நீடுவாழவும் நெஞ்சார வாழ்த்துகின்றோம்.*

(27775)(34-12-17-32) - உங்களால் உருவாக்கப்பட்ட மாணவ சமூகம்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 31 - 08 - 1964



அழிப்பு 16 - 01 - 1997

### சீவரட்ணம் உதயகுமார் (கலட்டிக்கண்ணன்)

திதி: அட்டமி 29.01.2004

*குடும்பத் தலைவனாய் நீயிருந்த காலம்*
*குறையேதுமில்லை கண்ணா!*
*குடும்பத் தெய்வமாய் நீயிருக்கும் காலம்*
*எம் குறை நீ அறியாயோ?*
*உன் நினைவால் வாடும் குறையொன்றே*
*உயிர் உள்ளவரை உள்ளக் கசிவன்றோ!*
*காலங்கள் பல கடந்திடினும்...*
*கோலங்கள் நாம் மாறிடினும்...*
*கண்ணா! நின் நினைவால் – இதயம்*
*கசிந் துருகித் துவள்கின்றோம்!*
*ஊழிப் பெருவலியால் நாமிங்கு....*
*உதயத்தின் அஸ்தமனத்தில் வாழுகின்றோம்*
*கணபதியருளினால் நின் மக்கட்செல்வங்கள்*
*கல்வியில் சிறந்து காலங்கள் வென்று*
*கற்றோர் போற்ற ஞாலத்தில் சிறக்க*
*காற்றாய் நின்றருள்வாய் கண்ணா!*
ஆண்டுகள் பலவானாலும்...
ஆறாத மனக்கவலை...

அழியாதநின்நினைவலைகளுடன்:

*91, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (27779) (12-17-32) -உன்குடும்பத்தினர்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 547 |
| திகதி | 27.01.2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
**4490137-4505034**

வெற்றி இலக்கங்கள் **05 30 32 33**

லக்கினம்
கும்பம்




ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,724,950/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 324,450 | 10 | 3,244,500 |
| 2 இலக்கங்கள் | 29,874 | 20 | 597,480 |
| 1 இல + லக்கினம் | 29,608 | 30 | 888,240 |
| 2 இல + லக்கினம் | 2,634 | 100 | 263,400 |
| 3 இலக்கங்கள் | 787 | 500 | 393,500 |
| 3 இல + லக்கினம் | 86 | 5,000 | 430,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 387,443 | - | 6,217,120 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,217,120/-

தொடர் இல. 5475908க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 30ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4499158-6-15
4496228-2-09
4502320-8-53
4491738-0-50
4499342-4-39

PHOENIX O&M

## விபத்தில் காயமடைந்த நபர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜன.29

கடந்த 23 ஆம திகதி நாரந்தனை பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் காயமடைந்தவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இரப்பல் இராயப்பு (வயது 65) என்பவரே இறந்தவராவார். மரணச் சடங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காக இவர் சைக்கிளில் சென்றார் என்றும் -

அப்போது நிலைதடுமாறி வீழ்ந்ததில் தலையின் பின் பகுதியில் படுகாயமடைந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது

கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து இவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அன்றையதினம் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அவர் மரணமானார். (ஒ-11)

# இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பரிசாரகருக்கு விரைவில் நியமனம்

சண்டிலிப்பாய்,ஜன.29

கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட பரிசாரகர் பயிற்சி நெறியில் கலந்துகொண்டு பயிற்சிபெற்று இறுதிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் யாழ்மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதார திணைக்கள நிறுவனங்களிலும் பணிபுரிந்துவரும் சிற்றூழியர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 34 ஆண், பெண் ஊழியர்கள் இதற்கான மூன்று மாதகாலப் பயிற்சியை பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் பெற்றிருந்தனர்.

பின்னர் கடந்த ஒச்ரோபர் மாதத்தில் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை, செய்முறைப்பரீட்சை ஆகியவற்றில் மேற்படி 34 பேரில் 27 பேர் சித்தி பெற்றிருந்தனர். இவ்வாறு இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கே வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர், நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நீண்ட காலமாக நிலவிவரும் ஆண், பெண் பரிசாரகர்களுக்கான வெற்றிடங்களுக்கே இவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பல்வேறு அரசினர் வைத்தியசாலைகளிலும் நூற்றுக்கு மேற்பட்ட பரிசாரகர்களுக்கான வெற்றிடங்கள் கடந்த பல வருடகாலமாக நிரப்பப்படாமல இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (எ-135)


நாகம்ஸ் சுன்னாகம்

கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த

E.A.P.இன் பொங்கல் வெளியீடு

விருமாண்டி

(சண்டியர்) (ரீலஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(சி-32739)(31)



நிறைஞ்சனாஸ் சங்கானை

பாடசாலை மாணவர்கள், பெரியோர்கள் பார்த்து ரசிக்கக் கூடிய படம்

HULK

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 8.45 (பு.நே.)

(C-32370) (36)

ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த் நடித்த

(ரீலீஸ்)

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(சி-32369) (32)


## தவறிவிட்டது

ஸ்ரேசன் றோட், கோண்டாவிலைச் சேர்ந்த ம.காயத்திரி என்பவருடைய தே.அ. அட்டை (No.827941018 V) யாழ்.நகரில் மின்சாரநிலைய வீதியில் நேற்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் முத்துமாரி களஞ்சியம் இல.338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம என்னும் முகவரியுடனோ அல்லது சொந்த முகவரியுடனோ தொடர்புகொள்ளவும்.

T.P - 776039870. (27786)(36)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பொதுமுகாமையாளர்

திரு.க. செல்வராசா அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் வேலன் கந்தையா அவர்கள்**

இறைபதம் அடைந்தமையையிட்டு

எமது ஆழ்ந்த அனுதாபங்களை

அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு

அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*215,பழையபூங்கா வீதி, யாழ்ப்பாணம்.*

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம் (வ-து).

(27784)(36-12-32)


லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார், மீனா, ரம்மியாக்கிருஷ்ணன், ஜெயராம் நடித்த

பாறை (ரீலஸ்)


தினசரி : 3.00, 7.00.



(சி-32863)


## 10 ஆவது சிரார்த்த தினம்

தோற்றம் 12 - 07 - 1918



மறைவு 19 - 01 - 1994

அமரர் **வயிரமுத்து கந்தப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் - கோப்பாய்)

திதி:-பூர்வபக்க அட்டமி

ஆண்டுகள் பத்து கடந்திடினும்

உங்கள் நினைவுகளுடன் வாழும்

*கோப்பாய் மத்தி, கோப்பாய்.*

(சி-32993)(36-12-32) குடும்பத்தினர்.

# அறிவித்தல்

**2003 ஆம் ஆண்டு டிசெம்பர் இலவச நிவாரணம் வழங்கல் சம்பந்தமாக உணவுப் பொருள்கள் பற்றிய விவரங்கள் பொதுமக்கள் நலன்கருதி கீழே தரப்பட்டுள்ளன.**

1) வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், தீவகம் ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் பெறும் பயனாளிகளுக்கு,

| பொருள்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருள்களின் அளவு (கிலோகிராம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிகப்பு நாட்டரிசி | 30.50 | 6.475 | 11.625 | 15.975 | 19.200 | 24.850 |
| திட்டல் பச்சை அரிசி | 27.50 | 2.750 | 5.250 | 7.000 | 8.500 | 10.500 |
| சீனி | 34.84 | 1.150 | 2.200 | 3.125 | 3.600 | 4.250 |
| பருப்பு | 56.67 | 0.400 | 0.700 | 0.900 | 1.100 | 1.150 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த பெறுமதி (ரூபா) | | 336/= | 616/= | 840/= | 1008/= | 1260/= |

2. யாழ்ப்பாணம், நல்லூர், அச்சுவேலி, நீர்வேலி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, அளவெட்டி, மல்லாகம், சங்கானை, சுன்னாகம், புங்குடுதீவு நயினாதீவு, நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கங்கள மூலம் உலர் உணவு பெறும் பயனாளிகளுக்கு,

| பொருள்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருள்களின் அளவு (கிலோகிராம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிகப்பு நாட்டரிசி | 30.00 | 6.575 | 11.825 | 16.250 | 19.525 | 25.250 |
| திட்டல் பச்சை அரிசி | 27.50 | 2.750 | 5.250 | 7.000 | 8.500 | 10.500 |
| சீனி | 34.84 | 1.150 | 2.200 | 3.125 | 3.600 | 4.250 |
| பருப்பு | 56.67 | 0.400 | 0.700 | 0.900 | 1.100 | 1.150 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த பெறுமதி (ரூபா) | | 336/= | 616/= | 840/= | 1008/= | 1260/= |

3. உடுப்பிட்டி, கட்டைவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, புலோலி, மருதங்கேணி, சாவகச்சேரி, கைதடி,, கொடிகாமம் ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் உலர்உணவு பெறும் பயனாளிகளுக்கு,

| பொருள்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருள்களின் அளவு (கி.கி.) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிகப்பு நாட்டரிசி | 29.00 | 6.800 | 12.250 | 16.800 | 20.250 | 26.125 |
| திட்டல் பச்சை அரிசி | 27.50 | 2.750 | 5.250 | 7.000 | 8.500 | 10.500 |
| சீனி | 34.84 | 1.150 | 2.200 | 3.125 | 3.600 | 4.250 |
| பருப்பு | 56.67 | 0.400 | 0.700 | 0.900 | 1.100 | 1.150 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த பெறுமதி (ரூபா) | | 336/= | 616/= | 840/= | 1008/= | 1260/= |

பயனாளிகள் மேற்படி நிவாரணப் பொருள்களைப் பெறும்பொழுது அவற்றின் அளவு, நிறை ஆகியவற்றை சரிபார்த்துக் கொள்வதற்காக மேற்படி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

(C/32991)(34-26-36-32-12)

**செ.பத்மநாதன்**
அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்.

## கண்ணீர் அஞ்சலி

கணிய அளவையியல் பட்டதாரி (2003) திரு. ரமேஸ்குமார் அவர்களின் தந்தையார்

**அமரர் கந்தையாபிள்ளை கெங்காதரன்**

அவர்களின் மறைவையொட்டி, பிரிவால்துயருறும் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மொறட்டுவை பல்கலைக்கழக கணிய அளவையியல் மூன்றாம் வருட மாணவர்கள்.

(சி-32996)(36-12-32)

## துயர் பகிர்கின்றோம

பருத்தித்துறை இலங்கை வங்கியில் பணிபுரியும் செல்வி கெங்காதரன் பிரேமலதா அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா கெங்காதரன்**

அவர்கள் 27.01.2004 அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவர்களின் குடும்பத்தின் துயரிலும் பகிர்ந்துகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-32995)(36-12-32)

முகாமையாளரும், ஊழியர்களும் இலங்கை வங்கி-பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கெங்காதரன்

சாமியன் அரசடி கரவெட்டியைச் சேர்ந்த கந்தையா கெங்காதரன் 27.01.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கமுத்து தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற சிவகுரு - தெய்வானை தம்பதிகளின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் சதீஸ்குமார் (கணக்காளர்- கொழும்பு), பிறேமலதா (இலங்கை வங்கி, பருத்தித்துறை), சுவர்ணலதா, ரமேஸ்குமா (மொறட்டுவப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, யோகதாஸ், செல்வராணி, சேனாதிராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராணி, பொன்னம்பலம் (உபாலி), ரமணி, காலஞ்சென்ற மீனாட்சி, Dr.வேலாயுதம், தங்கமணி, புவனேஸ்வரி, சரஸ்வதி, கந்தசாமி (ஸ்ரீலங்கா ரெலிகொம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2004) வியாழக்கிழமை 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாமியன் அரசடி, கரவெட்டி மத்தி, கரவெட்டி,* (சி-32994)(36-12-32)

தகவல்: சதீஸ்குமார்(மகன்).

### செல்லத்துரை சிவகுமார்

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவகுமார் அவர்கள் 27.01.2004 செவ்வாய்க் கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (முன்னாள் உரிமையாளர், செல்வன்கபே) மற்றும் பாக்கியத்தின் அன்பு மகனும் லில்லி நிர்மலாவின் (பவா - பிரான்ஸ்) அன்புக் கணவரும் நிவேதாவின் பாசமிகு தநதையும் திருமதி அ. சாந்தகுமாரி (கண்டி), சந்திரகுமார் (பிரான்ஸ்), திருமதி சி. சர்வேஸ்வரி (யாழ்ப்பாணம்), செல்வக்குமார் (கனடா), சிறீக்குமார் (ஜேர்மனி), செந்தில்குமார் (பிரான்ஸ்), திருமதி க. சூரியகுமாரி (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் சிவகுமாரன் (யாழ்ப்பாணம்), கௌரி (பிரான்ஸ்), லதாதேவி (கனடா), சகானா (ஜேர்மனி), ஜெயகௌரி (பிரான்ஸ்), கனகராசா (ஹொலண்ட) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.68/6, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்*

தகவல்: தாய், சகோதரர்கள், மைத்துனர்கள்.

(27789)(36-12-32)

# மீன்களை வேடிக்கை பார்த்தபோது ஆலயக் கேணிக்குள் விழுந்த சிறுவன்!

தென்மராட்சி,ஜன.29

ஆலயக் கேணியில் உள்ள மீன்களை வேடிக்கை பார்த்த சிறுவன் கேணிக்குள் தவறிவிழுந்தான்.

அதிர்ஷ்டவசமாக அங்கு நின்றவர்களால் அந்தச் சிறுவன் காப்பாற்றப்பட்டான்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த குமரவேல்ராசா விபுலன் (வயது 11) எனும் சிறுவனே கேணியில் விழுந்தவனாவான்.

நேற்றுமுன்தினம் மாலை பிரத்தியேக வகுப்புக்குச் சென்றுவிட்டு ஆலயக் கேணிக்குள் மீன்களை வேடிக்கை பார்க்கும் ஆசை எழுந்தது. இதனால் கேணியின் விளிம்புக்குச் சென்று மீன்களை சிறுவன் வேடிக்கை பார்த்தான். அப்போது தவறி கேணியில் அவன் வீழ்ந்தான். கேணியில் நீர் அதிகம் இருந்ததால் சிறுவன் நீரில் மூழ்கி மூச்சுத் திணறினான். அதற்குள் அயலவர்கள் சிறுவனைக் காப்பாற்றி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு 15 நிமிடங்களின் பின்னர் சிறுவன் சுயநினைவடைந்தான்.

(ஒ-117)

# 5 பிரதிப் பொலீஸ்மா அதிபர்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கை

ஐந்து பிரதிப்பொலீஸ்மா அதிபர்களுக்கு இடமாற்றங்கள் வழங்க பொலஸ் ஆணைக்குழுவின் அனுமதியை பொலஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா கோரியிருக்கிறார்.

இதன்படி, கொழும்பு மாவட்டத்திற்குப்பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் எச்.எம்.எஸ். ஹேரத், பொலீஸ் தலைமையக குற்ற, போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்.

ஆள்சேர்ப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் விக்டர் பெரேரா, ஆளனி நிர்வாகப் பிரிவின் தலைவராகவும் பொலீஸ் தலைமையக குற்ற, போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதப் பொலீஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன கொழும்பு மாவட்டத்திற்குப்பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபராகவும் இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

ஆளணி நிர்வாகப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி சில்வா, மத்திய மாகாண மேற்குப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபராகவும் அப்பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் டபிள்யூ. எம். ஆரியரத்ன வடமாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபராகவும் இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

THE BARBARA MULVANEY
Computer Training Centre
123, Temple Road, Jaffna
T.P:-222 - 5971
புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA COURSES
Diploma in Ms Office (4 Months)
Diploma in Desktop Publishing (4 Months)
Diploma in Photo Graphics (3 Months)
Diploma in Kids Course (1-2 Months)
CERTIFICATE COURSES
Internet & E-mail (2 Months)
Visual Basic (3 months)
Auto CAD (2 Months)
இப் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் 5ம் திகதி ஆரம்பமாக இருப்பதால் உங்கள் பதிவுகளுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
A/L - 2005, 2006
கணித, உயிரியல்
புதிய பிரிவு ஆரம்பம்.
(27551)

Lingam master - swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss.
(26642)(36-12)

விற்பனையாளர்கள் தேவை
புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் நற்சான்றுடன் தொடர்புகொள்ளவும்.
குறிப்பு: அனுபவமுள்ளவர்களுக்கு சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(27705)(12-14)

## இளைஞரைத் தாக்கச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிற்கு சுமார் பதினைந்து பேர்கொண்ட கும்பல் ஒன்று வந்தது. அதனைக் கண்டதும் மேற்படி இளைஞனின் தாயார் தனது சகோதரியின் வீட்டிற்கு உதவி கேட்டுச்சென்றுள்ளார்.

இதேவேளை, வீட்டிற்குள் புகுந்த கும்பல் அங்கு இளைஞன் இல்லாத நிலையில் அங்கிருந்த இளைஞனின தந்தையை கத்தி மற்றும் தடிகளால் தாக்கிவிட்டு தப்பிச்சென்றுவிட்டது.

இறந்தவரின் மனைவி சகோதரியின் வீட்டிலிருந்து சுமார் அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் வந்துள்ளார். அங்கு கணவன் இரத்தம் சிந்த வீட்டு வாசலில் மூச்சுப் பேச்சின்றிக் கிடந்ததைக்கண்டார். அவரை எழுப்ப முயற்சித்தபோது அவர் இறந்தது தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கொலைச் சம்பவம் நடந்த இடத்தை மல்லாகம் நீதிவான் நேரில் பார்வையிட்டார். இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் சடலம் இறந்தவரின் மனைவியிடம் கையளிககப்பட்டது.

இந்தக் கொலைச் சமபவம் தொடர்பாக 4பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஒ-6-9-11-86)

## ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20ஆம் திகதி இலங்கைக்கு வந்த பின்னர் எதிர்க்கட்சியின் தலைவர் ஒருவரைச் சந்தித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## ஐக்கிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்வாரா என்பது குறித்து நேற்றுப் பகல் வரை ஜே.வி.பி. ஊடகப் பிரிவு உறுதிசெய்யவில்லை.

சு.க.முக்கியஸ்தர்களான அநுரபண்டாரநாயக்க, நிமல் சிரிபாலடிசில்வா, மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் ஜே.வி.பி. முகக்கியஸ்தர்களான ரில்வின் சில்வா, விமல் வீரவன்ஸ, அநுரகுமார திசாநாயக்க, விஜித ஹேரத், ஆர்.சந்திரசேகரன், நந்தன குணதிலக, அஞ்சான் உம்மா ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

## ஜப்பானிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்.

இந்தச் சந்திப்புக்கு முன்னர் கொழும்பில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.அபிவிருத்திச் சபை, இலங்கைக்கு உதவி வழங்கும் முக்கிய நாடுகளின் குழுக்கள், கொழும்புத் திட்டம் ஆகிய வற்றின் தலைவர்களை இத்தூதுக் குழுவினர் சந்தித்துப் பேசுவர்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நிதி அமைச்சின் செயலர் சரித்தரத்வத்தை ஆகியோருடனும் இக்குழு கலந்துரையாடவுள்ளது

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுக்குள் வீழ்ந்து தத்தளித்தனர்.

இதனையடுத்து 'டோரா' படகு திரும்பி அப்பகுதிக்கு வந்தது. அதிலிருந்த கடற்படையினர் கடலில் தத்தளித்த கடற்றொழிலாளர்கள இருவரையும் மீட்டனர்.

பின்னர் இருவரும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கு பலாலி இராணுவ மருத்துவமனையில் முதற்கட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 2.30 மணியளவில் அவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, 'டோரா' படகால் மோதுண்டு மோசமாகச் சேதமடைந்த படகை சககடற்றொழிலாளர் கடலிலிருந்து மீட்டு நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் கரை சேர்ந்தனர்.

(ஒ-8-11-173)

## எந்த நம்பிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் 1976ஆம் ஆண்டில் தனிநாடு கோரிக்கை வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்டபோது, இக்கோரிக்கை, மலையக மக்களின் எதிர்காலத்துக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தொன்றாகக் காணப்படாத காரணத்தினால் இ.தொ.கா. முன்னணியில் இருந்து விலகிநிற்கநேரிட்டது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, தாங்கள் தேர்தலில் போட்டியிடுவதற்காக, எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை இடை நிறுத்தி தாங்கள் போட்டியிடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம். ஆனால், தேர்தலுக்குப் பின்னர் தாங்கள் அதனை மறந்து வேறு வழியில் சென்றதை நினைவுகூற விரும்புகின்றோம் -

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

## மக்களிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறவேண்டும்.

★ சிங்களத் தலைமைகள் தமக்கிடையேயான அதிகாரப் போட்டிகளை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடர வேண்டும்.

★ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையில் இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

என்ற ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இக்கையெழுத்து வேட்டையை நடத்துவதென்று இந்தக் கலந்துரையாடலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், விரிவுரையாளர் சிதம்பரநாதன் ஆகியோர் மற்றும் யாழ்மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-8)

NCA கல்வி நிறுவனம்
சாரையடி, பருத்தித்துறை.
A/L 2006
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்
(27552)(30)

பொருளியல்
திரு. K. உதயன்
A/L 2006
2ஆவது புதிய பிரிவு
பிரிவு I சனி, ஞாயிறு 9.30 - 10.30)
(100 பேருடன் அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது)
பிரிவு II சனி, ஞாயிறு 8.30- 9.30 (S.L.T.)
ஆரம்பம்: 01.02.2004
விக்னா கல்வி நிறுவனம்

சிங்களம்
எழுத, பேச, வாசிக்க...
புதிய பிரிவு II
E.S.பியதாஸா
(Sinhala trained S.L.T.S. Class one)
ஆரம்பம்:31-01-2004 Sat.- 4.30p.m.
மாணவர்களின் வசதிகேற்ப நேரசூசி பிரிக்கப்படவுள்ளது.
மதுபாரத்
இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்.
(27714) (36-12) -நிர்வாகி.

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2005
ஒப்படைக்கணக்கு
Sat.,Sun.-12.30- 1.30(S.L.T)
ஆரம்பம்:
31.01.2004 - Sat. 12.30
BEACON
வெலிங்டன் சந்தி அருகில்

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P.: 0214-590222 E-Mail: etouch@wow.lk
மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலை நேர (4.00 p.m. to 7.00 p.m.) வகுப்புகள் ஆரம்பம்.

| COURSE NAME | COURSE FEES | DURATION |
|---|---|---|
| DIPLOMA IN PC HANDLING | FREE | 6 Weeks |
| DIPLOMA IN MICROSOFT OFFICE | 1500 | 3 Months |
| DIPLOMA IN INFORMATION TECHNOLOGY | 1500 | 3 Months |
| DIPLOMA IN MULTIMEDIA | 2000 | 3 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 2000 | 3 Months |
| DIPOLOMA IN ENGINEERING DRAWING | 2000 | 3 Months |
| DIPLOMA IN COMPUTER PROGRAMMING | 2000 | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE | 2500 | 4 Months |
| SRI LANKA COMPUTER DRIVING LICENSE | 3000 | 4 Months. |

REGISTRATION FEES 1100/=
- புதிதாகக் கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் கணனிபற்றி முழுமையாக அறிந்துகொள்ளும் Diploma in PC Handling (Online Class) பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படும்!!!
- GIT பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர (3.30 to 4.30) கற்கைநெறி - Diploma in Information Technology.
- இலங்கை அரசினால் நடத்தப்பெறும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழிற்கான (Sri Lanka Computer Driving Licence - SLCDL) வகுப்புகள்.

விண்ணப்ப முடிவு திகதி
02.02.2004
-DIRECTOR.
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P.: 0214 590222 E-Mail: etouch@wow.lk
(27767)(36-12)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.